بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 2

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ர:ஃபிக் அஹ்மது

7 ஜமாதியல் ஸானி 1437 ஹிஜ்ரி கமரி 17 மார்ச் 2016

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அல்லாஹ்வின் அருளால் நலமுடம் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த ஆரோக்கியத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக! மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

اَللّٰهُمَّ اَيِّدْ اِمَامَنَا بِرُوْحِ الْقُدُسِ
وَبَارِكْ لَنَا فِيْ عُمُرِهٖ وَاَمْرِهٖ

இப்போது இந்த அனைத்து விஷயங்களையும் நான் கூறியதன் நோக்கம் இதுவாகும். அதாவது, அல்லாஹ் தான் ஒருவருடன் அன்பு செலுத்துவதற்கு இந்த விஷயத்தை நிபந்தனையாக வைத்துள்ளான். அதாவது, அப்படிப்பட்ட நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்ற வேண்டும். எனவே, எனக்கு இதில் சொந்த அனுபவம் இருக்கின்றது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையான உள்ளத்துடன் பின்பற்றுவதும் அவர்கள் மீது நேசம் கொள்வதும் இறுதியில் மனிதனை இறைவனுக்கு பிரியமானவனாக ஆக்கி விடுகின்றது.

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

நான் இந்த இடத்தில் இதையும் கூறி விடுகின்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையாகவும் முழுமையாகவும் பின்பற்றிய பிறகு எல்லாவற்றிற்கும் முதலாவதாக உள்ளத்தில் உருவாகின்ற அந்த விஷயம் என்ன? அது கல்பே சலீம் (என்ற சாந்தி நிறைந்த உள்ளம்) ஆகும். அதாவது உள்ளத்திலிருந்து உலகின் நேசம் வெளியேறி விடுகின்றது. உள்ளம் என்றென்றும் நிலைத்திருக்கின்ற, என்றும் அழியாத ஓர் இன்பத்தை வேண்டுகின்றது. பிறகு இந்த சாந்தி நிறைந்த உள்ளம் கிடைத்து விட்டதன் காரணமாக தூய மற்றும் முழுமையான இறை அன்பு கிடைக்கின்றது. இந்த எல்லா அருள்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதன் மூலமாக அன்னாரது வாரிசு என்ற நிலையில் கிடைப்பதாகும்.

இதைப் பற்றி சுயமே இறைவன் இவ்வாறு கூறுகின்றான்: قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّونَ اللّٰهَ فَاتَّبِعُونِي يُحْبِبْكُمُ اللّٰهُ அதாவது, அவர்களிடம் கூறுவீராக! நீங்கள் இறைவனை நேசிப்பவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள். அதன் மூலமாக இறைவனும் உங்களை நேசிப்பான். (3:32)

இன்னும் சொல்வதென்றால், ஒரு பக்கம் மட்டும் அன்பு இருப்பதாக வாதம் செய்வது முற்றிலும் ஒரு பொய்யான வீணான வெற்றுப் பேச்சாகும். மனிதன் உண்மையான முறையில் இறைவனிடம் அன்பு செலுத்தும் போது இறைவனும் அவனிடம் அன்பு செலுத்துகின்றான். அப்போது பூமியில் அவனுக்காக ஓர் ஏற்புடைமை பரப்பப்படுகின்றது. மேலும், ஆயிரக்கணக்கான மனிதர்களது உள்ளத்தில் அவனது ஓர் உண்மையான அன்பு போடப்படுகின்றது. ஓர் ஈர்க்கின்ற ஆற்றல் அவனுக்கு வழங்கப்படுகின்றது. ஓர் ஒளி அவனுக்கு தரப்படுகின்றது. அது எப்போதும் அவனுடன் இருக்கும். ஒரு மனிதன் உண்மையான உள்ளத்துடன் இறைவன் மீது அன்பு கொள்ளும் போது, முழு உலகிற்கும் எதிரில் அவனை பற்றிப்பிடித்து கொள்ளும் போது, அல்லாஹ் அல்லாதவற்றின் மகிமையும் அழகும் அவரது உள்ளத்தில் எஞ்சியிருக்கவில்லை. மாறாக, எல்லாரையும் ஒரு மரணித்துபோன பூச்சியை விடவும் மோசமானவராக அவர் கருதுகின்றார் என்றால், அப்போது அவரது உள்ளத்தைப் பார்க்கின்ற இறைவன் ஒரு மிகப்பெரும் தோற்றத்துடன் அவன் மீது இறங்குகின்றான். சூரியனுக்கு எதிரில் வைக்கப்பட்டுள்ள ஒரு தூய கண்ணாடியில் சூரியனின் பிம்பமானது முழுமையான முறையில் படியும் போது உவமையாகவும் உருவகமாகவும் விண்ணில் இருக்கின்ற அதே சூரியன் அந்த கண்ணாடியிலும் இருக்கின்றது என்று நம்மால் கூற முடியும். அவ்வாறே, இறைவன் அத்தகைய உள்ளத்தின் மீது இறங்குகின்றான். அவரது உள்ளத்தை தனது அரியணையாக ஆக்கிக் கொள்கின்றான். இந்த ஒரு விஷயத்திற்காகவே மனிதன் படைக்கப்பட்டுள்ளான். முன்னுள்ள வேதங்களிலும் முழுமையான உண்மையாளர்களை இறைவனின் மகன் என்று கூறப்பட்டிருக்கின்றது. இதற்கு உண்மையிலேயே அவர்கள் இறைவனின் மகன்கள் ஆவர் என்ற பொருளல்ல. ஏனென்றால், இவ்வாறு கூறுவது கு:ஃப்ர் (இறைவனை மறுப்பது) ஆகும். இறைவன் மகன்கள் மற்றும் மகள்கள் ஆகியோரை விட்டு தூய்மையானவனாக இருக்கின்றான். மாறாக, இதன் பொருள் இந்த முழுமையான உண்மையாளர்களின் தூய கண்ணாடியில் பிம்பமாக இறைவன் இறங்கி இருந்தான். ஒரு நபரின் பிம்பம் கண்ணாடியில் தெரியும் போது உருவக வடிவில் அவன் அவரது மகனாகவே இருக்கின்றான். ஏனென்றால், எவ்வாறு மகன் தந்தை மூலமாக பிறக்கின்றானோ அவ்வாறே பிம்பம் தனது அசல் மூலமாகவே பிறக்கின்றது. எனவே, மிகவும் தூய்மையான எவ்வித மாசும் எஞ்சியிருக்காத அத்தகைய உள்ளத்தில் இறைத் தோற்றத்தின் பிரதிபலிப்பு ஏற்படுகின்ற போது அந்த பிம்பத்தின் உருவமானது உருவகமாக அசலுக்கு மகனாகி விடுகின்றது. இதன் அடிப்படையிலேயே யாகூப் எனது மகனாவார். இன்னும் சொல்வதென்றால், எனது ஏக புதல்வராவார் என்று பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கின்றது. மேலும், சுவிசேஷங்களில் மர்யமின் மகனாகிய ஈஸாவையும் பற்றி மகன் என்று கூறப்பட்டிருக்கின்றது. எவ்வாறு இப்ராஹிம், இஸ்ஹாக், யாகூப், யூசு:ஃப், மூஸா, தாவூது மற்றும் சுலைமான் போன்றோர் இறைவனது வேதங்களில் உருவக வடிவில் இறைவனின் மகன்கள் என்று அழைக்கப்பட்டிருக்கின்றார்களோ அவ்வாறே ஈஸாவும் அழைக்கப்பட்டுள்ளார் என்ற அளவில் கிறித்தவ மக்கள் நிற்கின்றனர் என்றால் அவர்கள் மீது எந்த ஆட்சேபனையும் இருக்காது. ஏனென்றால், எவ்வாறு உருவக வடிவில் இந்த நபிமார்கள் முன்னுள்ள

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian.

# ஜுமுஆ பேருரை

அல்லாஹ் தன் புறமிருந்து ஒருவரை முன்னிலைப்படுத்தும் போது அல்லது நபிமார்களை அனுப்பும் போது அவர்களுக்கு அவன் உதவி ஒத்தாசைகளைச் செய்கின்றான். அவர்களின் உண்மைத்துவத்தை வெளிப்படுத்தும் பொருட்டு, உலகின் பெரும்பான்மை மக்களுக்கு அவர்களின் தீய செயல்களின் காரணமாக அவன் தண்டனை வழங்க நாடினால் அவன் எதனையும் பொருட்படுத்தாமல் தண்டனை வழங்குகின்றான். இஸ்லாத்தின் கட்டளை இது தான். அதாவது, ஒவ்வொரு நபரும் தனது உரிமையைப் பெறுவதற்கு பகரமாக, அதைப் பெறுவதற்கு சண்டையிடுவதற்குப் பகரமாக, பிறரின் உரிமையைக் கொடுப்பதற்கும், அதை நிலைநாட்டவும் முயற்சி செய்ய வேண்டும்.

பிறரின் உரிமைகளைப் பறித்து நாம் நீண்ட காலமாக நிலைநிற்கின்றோம். அதிலிருந்து பயனடைந்து வருகின்றோம். பிறரின் உரிமைகளை தமது உரிமைகளாகக் கருதும் பழக்கம் ஏற்பட்டு விட்டது. எனவே எங்களால் பிறருக்குரிய உரிமைகளை வழங்க முடியாது என்று கூறுவது இஸ்லாமிய உயிரோட்டம் ஆகாது. (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 17, பக்கம் 678-679) இது மாபெரும் தவறாகும். மேலும், அது இஸ்லாமிய போதனைகளுக்கு எதிரானதாகும். சில முறை நீதிமன்றத்தில் சில வழக்குகள் வருகின்றன. நமது ஜமாஅத்திலும் கூட அவ்வாறு வருகிறது. ஒரு சகோதரர் தனது மற்றொரு சகோதரரின் உரிமையைப் பறிக்கின்றார் அல்லது பிற அன்பர்களின் உரிமைகளைப் பறிக்கின்றனர். நாம் இதன் பக்கம் கவனம் செலுத்தினால் நமது கஸாவின் நீதிமன்றத்தின் பல்வேறு வழக்குகள் முடிவுக்கு வந்து விடும்.

உலகியல் சண்டைகள் வீணானதாகும். என்னுடையது; உன்னுடையது என்று என்ன உள்ளது? அடிமைக்கென்று எதுவும் இருப்பதில்லை. எவர் தன்னை அப்துல்லாஹ் - இறையடியார் என்று கூறுவாரோ அப்போது அவருக்கென்று எதுவும் இருப்பதில்லை. நாம் எவ்வாறு இறை அடியாராக ஆக வேண்டும்? என்ற விஷயத்தை முன்பை விட அதிகமாக புரிய வேண்டும். மேலும் தமது பிடிவாதம் மற்றும் நான் என்ற அகந்தையைக் கை விடுதல் வேண்டும். மேலும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற முயற்சி செய்ய வேண்டும். இந்த வருடமும் தேர்தலுக்குரிய வருடமாகும். ஜமாஅத் அளவில் இவ்வருடம் தேர்தல் நடக்கும். அந்த அடிப்படையில் ஒவ்வொருவரும் தத்தமது எண்ணத்தை சரி செய்வது அவசியமாகும். துஆ செய்து அனைத்து தொடர்புகளுக்கும் உறவுகளுக்கும் அப்பாற்பட்டு, தனது உரிமையை சரியாக பயன்படுத்தி தனது கருத்தைத் தெரிவிக்க வேண்டும். அதற்குப் பிறகு வழங்கப்படும் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். முழுமையாக சுயநலத்திலிருந்து விலகி உங்கள் முடிவை எடுக்க வேண்டும்.

அதிகாரியாக இருக்கட்டும் அல்லது பொறுப்பாளராக இருக்கட்டும் அவர்கள் தமக்கு கீழ் பணி செய்பவர்களைச் சார்ந்து இருத்தல் கூடாது. மாறாக, நேரடியாக தாமே அனைத்துப் பணிகளையும் மேற்பார்வையிட வேண்டும். அதில் ஈடுபட முயற்சி செய்ய வேண்டும். அப்போது தான் பணி சரியான முறையில் நல்ல முடிவை எட்ட முடியும்.

சில மக்கள் சில முறை விரும்பிய பிறகும் சில பணிகள் நடைபெறுவதில்லை. அதற்கு காரணம் அவர்களின் விரும்புதல் என்பது மனதார இருப்பதில்லை. அதனுடன் கூறப்பட்ட நிபந்தனைகளைக் கைகொள்வதில்லை. மனஉறுதியும், தைரியமும் இருப்பதில்லை. கடின உழைப்பும் செய்வது கிடையாது. மாறாக மனதில் நாங்கள் விரும்புகிறோம் என்ற எண்ணம் மட்டுமே இருக்கின்றது. குறிப்பாக, நான் இந்த விஷயத்தை குறிப்பிடுகிறேன். தொழுகை பற்றிய கேள்வி எழுகின்றது. பலர் என்னிடம் கூறுகின்றனர். எங்களுக்காக துஆ செய்யுங்கள். நாங்கள் தொழுகைகளில் நிரந்தரமாக நிலைபெற விரும்புகிறோம். ஆனால், எங்களால் முடிவதில்லை. ஆனால் மற்ற பணிகளை விரும்பும் போது அதை செய்து விடுகின்றனர். தொழுகையை நிலை நாட்ட மனமார விரும்புவதில்லை. தனது ஆற்றல்களை அதற்காக பயன்படுத்துவது கிடையாது. அல்லாஹ்விடத்தில் உதவி தேடுவது கிடையாது. எனவே தொழும் பழக்கமும் ஏற்படுவதில்லை. அதுபோன்ற மக்களின் விரும்புதல் என்பது விருப்பமற்றதாகவே உள்ளது. மனிதனின் சோம்பலும் ஆர்வமற்றத் தன்மையும் தோல்விக்கு காரணமாக அமைகின்றது. அவ்வாறிருக்க, அவன் தேவையின்றி விரும்புகிறோம் எனக் கூறுகின்றான்.

ஒரு நேரம் மட்டும் வந்து தொழுது விட்டு கடமை நிறைவேறி விட்டது என்று எண்ணுவதும் கூட நகைப்பிற்குரியது தான். எவர்கள் ஒரு நேரம் பள்ளிவாயிலுக்கு வந்து தொழுவதால் கடமை நிறைவேறி விட்டது என எண்ணுகின்றனரோ அவர்களது இந்த செயலும் நகைப்புக்குரியதாகும். (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 23, பக்கம் 438-439) எவர்கள் தொழுகைகளின் பக்கம் தொடர்ந்து கவனம் செலுத்துவதில்லையோ அவர்கள் இப்படிப்பட்ட கூட்டத்தையே சார்ந்தவராவார். ஐவேளை தொழுகை ஒவ்வொரு வயது வந்த அறிவு படைத்த முஸ்லிம்களின் மீதும் கடமையாகும். ஆண்களுக்கு பள்ளிவாயிலில் வந்து தொழுவது அல்லது ஜமாஅத்தாகத் தொழுவது கடமையாகும். அதற்கான ஏற்பாடு இருக்க வேண்டும் அல்லது நாங்கள் வயது வந்தவர்கள் இல்லை என்றோ அல்லது அறிவற்றவர்கள் என்றோ கூறினால் பரவாயில்லை. இந்த இரண்டு விஷயமும் இல்லையென்றால் பின்னர் தொடர்ந்து ஜமாஅத்தாக தொழுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நன்மையான காரியங்களை செய்பவரே உண்மையான முஃமின் ஆவார். முன்பை விட நல்ல காரியங்களைச் செய்யும் போது முன்னரை விட அதிகமான பணிவுடனும், இஸ்திக்ஃபாருடனும் அல்லாஹ்விடத்தில் மேலும் நன்மையான காரியங்களைச் செய்வதற்கான பாக்கியத்தை வேண்ட வேண்டும்.

ஈமான் நமது செயல்களின் விளைவாக வருவதல்ல. மாறாக, அல்லாஹ்வின் கருணையின் விளைவால் வருவதாகும். இது மிக அடிப்படையான விஷயமாகும். இதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நமது செயல்கள் எவ்வளவு இருந்தாலும் சரி அல்லாஹ்வின் கருணையும் அருளும் இல்லையென்றால் பின்னர் ஈமான் முழுமையாக முடியாது. நாவினால் கட்டுப்படுவதாக வாதம் செய்வதும் ஒரு பெரிய காரியமல்ல. செயல்படுவது தான் பெரிய விஷயமாகும். வாயினால் கட்டுப்படுவதாக வாதம் செய்யக்கூடியவர் சில நேரத்தில் மிகப்பெரிய நயவஞ்சகனாகக் கூட இருக்கக் கூடும்.

அஹ்மதிய்யத் நிச்சயமாக வெற்றி பெற்றே தீரும். அது ஒருவேளை நமது வாழ்நாளில் நிகழலாம் அல்லது அதற்குப் பிறகு நிகழலாம். ஆனால், அந்த வெற்றியில் பங்குதாரர்களாக இடம்பெற நாம் தக்வாவில் நிலைநிற்பது மிகவும் அவசியமாகும். ஏனென்றால் அப்போது தான் நமது வாழ்நாளில் இல்லா விட்டாலும் கூட நமது சந்ததிகள் அதனை காண முடியும்.

சில ஆண்டுகள் ஆகின்றன. நானும் ஜமாஅத்திலுள்ளவர்கள் நோன்பு வைக்க வேண்டும் எனக் கூறியிருந்தேன். (குத்பாத்தே மஸ்ரூர் தொகுதி 9 பக்கம் 501-502) இன்றும் சிலர் உள்ளனர். அவர்கள் நோன்பு நோற்கின்றனர். குறைந்தபட்சம் இப்போது 40 நோன்புகள் வைக்க வேண்டும். வாரம் ஒன்று வீதம் 40 வாரம் வரை நோன்பு வையுங்கள். குறிப்பாக துஆ செய்யுங்கள். நஃபில் தொழுது வாருங்கள். ஸதக்கா கொடுங்கள். ஏனெனில் ஜமாஅத்தின் நிலை என்னவென்றால் சில இடங்களில் மிக அதிக அளவில் கடுமை காட்டப்படுகின்றது. நாம் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் முறையிடும் போது எவ்வாறு குழந்தையின் அழுகையினால் தாயின் மார்பிலிருந்து பால் சுரக்கின்றதோ அதுபோன்று விண்ணிலிருந்து நமது ரப்பின் கருணை இறங்கும். இன்ஷா அல்லாஹ். மேலும் நமது வழிகளிலுள்ள தடைகளும், கஷ்டங்களும் அகன்று விடும். இன்ஷா அல்லாஹ். முன்னரும் இந்த தடைகளும், கஷ்டங்களும் இவ்வாறே அகன்றன. இப்போதும் அவ்வாறே விலகும்.

நாம் இறை சன்னிதானத்தில் மிக அதிகமாக கதறுவது அவசியமாகும். பாகிஸ்தானிய அஹ்மதிகள் குறிப்பாக முன்பை விட அதிகமாக இதன் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். தூய்மையுடன் அல்லாஹ்வுக்கு முன் குனியுங்கள். நவாஃபில்கள் தொழுங்கள். ஸதக்காக்கள் கொடுங்கள். நோன்பு வையுங்கள். துஆக்கள் இன்றி அல்லாஹ்வின் கருணையை பொங்கி எழச் செய்வதைத் தவிர்த்து நமக்கு வேறு வழியில்லை. குறிப்பாக எங்கெல்லாம் அஹ்மதிகளுக்கு எதிராக அநீதிகள் அரங்கேறுகின்றனவோ அங்குள்ள அஹ்மதிகளுக்கு அர்ஷை அசைக்கும் துஆக்கள் செய்யும் பாக்கியத்தை அல்லாஹ் வழங்குவானாக! பொதுவாக முழு உலக அஹ்மதிகளும் ஜமாஅத்தின் முன்னேற்றம் மற்றும் அநீதிகளிலிருந்து தப்பிப்பதற்கு துஆவின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு அதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக! ஆமீன்.

# ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் லண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 12 பிப்ரவரி 2016 அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 –ஆம் ஆண்டு தப்லீக் மாதம் 12 –ஆம் தேதி ஆற்றிய ஜுமுஆ பேருரை

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ -
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ -

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எடுத்துரைத்த படிப்பினைக்குரிய விஷயங்களையும், கதைகளையும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தமது பல்வேறு குத்பாக்களிலும், சொற்பொழிவுகளிலும் எடுத்துக் கூறியுள்ளார்கள். அதனை நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் கூறி வந்துள்ளேன். இன்றும் நான் அதனை எடுத்துரைப்பேன். அதாவது அல்லாஹ் தன் புறமிருந்து ஒருவரை முன்னிலைப்படுத்தும் போது அல்லது நபிமார்களை அனுப்பும் போது அவர்களுக்கு அவன் உதவி ஒத்தாசைகளைச் செய்கின்றான். அவர்களின் உண்மைத்துவத்தை வெளிப்படுத்தும் பொருட்டு, உலகின் பெரும்பான்மை மக்களுக்கு அவர்களின் தீய செயல்களின் காரணமாக அவன் தண்டனை வழங்க நாடினால் அவன் எதனையும் பொருட்படுத்தாமல் தண்டனை வழங்குகின்றான்.

இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய கதை ஒன்றை குறிப்பிட்டவாறு அன்னார் கூறுகின்றார்கள்: சிறிய வயதில் எங்களுக்கு கதைகள் கேட்பதில் ஆர்வம் அதிகம் இருந்தது. நாங்கள் கதை கூறும் போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கேட்கும் போது அன்னார் படிப்பினைகளைத் தரக்கூடிய கதைகளை எங்களுக்கு கூறுவார்கள். அந்த வகை கதைகளில் ஒரு கதை தற்போது எனது நினைவில் உள்ளது. இதனை நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நாவினால் கூறக் கேட்டேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நூஹ் (அலை) அவர்களின் காலத்தில் வெள்ளம் வந்ததற்கான காரணம் என்னவென்றால், அக்காலத்தில் மக்கள் சீர்கெட்டிருந்தனர். பாவங்களில் ஈடுபட்டனர். பாவங்கள் செய்வதில் முன்னேற முன்னேற இறைவனின் பார்வையில் அவர்களின் மதிப்பு குறைந்து கொண்டே சென்றது. இது ஒரு கதையாகும். கடைசியில் ஒருநாள் வந்தது. அதாவது மலையின் மேல் மரம் ஒன்று இருந்தது. அந்த மரத்தின் கூட்டில் ஒரு குருவிக்குஞ்சு ஒன்று அமர்ந்திருந்தது. அந்தக் குருவிக்குஞ்சின் தாய் எங்கோ சென்றிருந்தது. திரும்பி வரவேயில்லை. ஒருவேளை மரணித்திருக்கலாம் அல்லது வேறு ஏதோ காரணமாக இருக்கலாம். சிறிது நேரத்தில் அந்தக் குருவிக்குஞ்சிற்கு தாகம் எடுத்தது. அது தாகத்தால் துடித்தது. அப்போது அதனைக் கண்ட அல்லாஹ் வானவர்களை நோக்கி கட்டளையிட்டான். செல்லுங்கள்; சென்று பூமியில் மழையைப் பொழியுங்கள். எந்த அளவுக்கு மழையைப் பொழியச் செய்ய வேண்டும் என்றால் மலையின் உச்சியில் அந்த மரத்தின் கூடு வரை தண்ணீர் வந்தடைய வேண்டும். அதன் மூலம் கூட்டில் அமர்ந்திருக்கின்ற அந்தப் குருவிக்குஞ்சு அந்த தண்ணீரை அருந்தி, தனது தாகத்தை தீர்த்துக் கொள்ள வேண்டும். அப்போது, இறைவா! அந்த அளவுக்கு மழை பொழியச் செய்தால் முழு உலகமும் மூழ்கி விடும் என்று வானவர்கள் கூறினர். அதற்கு இறைவன், பரவாயில்லை. என்னிடத்தில் அந்தக் குருவிக்குஞ்சிற்குள்ள மதிப்பு கூட தற்போது இந்த மக்களுக்கு கிடையாது என்று கூறினான். (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 17, பக்கம் 678-679)

ஆக, இது ஒரு கதை தான். ஆனால் இக்கதையில் படிப்பினை உள்ளது. முழு உலக மக்களும் ஒன்று சேர்ந்தாலும் அவர்களிடத்தில் உண்மையும், நேர்மையும் இல்லாதிருந்தால் இறைவனின் பார்வையில் ஒரு குருவிக் குஞ்சிற்கு இருக்கும் மதிப்பு கூட அவர்களுக்கு இருக்காது. நாம் உண்மையில் நிலைநிற்க வேண்டும் என்ற படிப்பினையை இந்தக் கதையிலிருந்து பெறுகின்றோம். நாம் நம்மை ஆய்வும் செய்ய வேண்டும். நாம் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கவும், நம்மிடமுள்ள தீமைகளை அகற்றவும், நன்மைகளை நிலைநாட்டவும் தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளோம். ஆனால், காலம் செல்லச் செல்ல நமது நிலைகளில் முன்னேற்றத்திற்குப் பகரமாக பின்னடைவு ஏற்படுகின்றது அல்லது நிலைமை கீழ்நோக்கிச் செல்கின்றது என்றால் அதன் பொருள், நாம் நமது நோக்கத்திலிருந்து விலகிச் செல்கின்றோம் என்பதாகும். அந்நிலையில் அல்லாஹ்வும் நம்மை பொருட்படுத்த மாட்டான். அதே போன்று, இன்று உலகின் நிலை என்ன? என்பது ஒன்றும் ஒளிவுமறைவான விஷயமில்லை. பெரும்பாலான நாடுகளில் பொதுமக்களும், அரசாங்கங்களும் ஒருவர் மற்றவருக்குரிய உரிமைகளை வழங்குவதில்லை. குழப்பமும், சீர்கேடும் நிலவுகின்றது. மேலும் எந்தப் பகுதியில் வெளிப்படையில் அதிகமான குழப்பங்கள் இல்லையோ அல்லது நிலைமை மிக அதிகமாக மோசமாகி விட வில்லையோ அங்கும் அல்லாஹ்வின் விருப்பத்திற்கு எதிராக அல்லாஹ்விடமிருந்து விலகி அவனுக்கு எதிராகப் பேசி இறைவனை ஏளனம் செய்ய முயற்சி செய்யப்படுகிறது. அசுத்தமான விஷயங்களில் எந்த அளவுக்கு மூழ்குகின்றனர் என்றால் மனித இயல்பிற்கு எதிரான விஷயங்களை சட்டமாக இயற்றுகின்றனர். இன்னும் சொல்லப் போனால், எவர் அசுத்தமான விஷயங்களுக்கு உதவுவதில்லையோ அவர் சட்டத்தின் பார்வையில் குற்றவாளி எனக் கூறப்படுகின்றது. இந்த நிலநடுக்கங்கள், இந்த புயல்கள், இந்த குழப்பங்கள் மற்றும் அழிவை ஏற்படுத்தும் பெருமழை இவை அனைத்தும் பாவத்தின் உச்சத்தை மனிதன் அடைவதால் வெளிப்படுகின்றன. அல்லாஹ் இதன் மூலம் எச்சரிக்கை செய்கின்றான். எனவே இந்த அடிப்படையிலும் அஹ்மதிகளுக்கு பெரிய பணி உள்ளது. அவர்கள் உலகை எச்சரிக்க வேண்டும். நீங்கள் உங்களின் சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்தவில்லையென்றால், அல்லாஹ் மிகப்பெரிய அபாயகரமான அழிவைக் கொண்டு வந்து விடலாம் என்று அவர்களிடம் கூற வேண்டும். உலகத்திற்கு அல்லாஹ் அறிவை வழங்குவானாக!

அடுத்து, நாம் இன்றைய நிலையில் ஒரு விஷயத்தைக் காண்கிறோம். உலகில் தனது உரிமையைப் பெறுவதற்கான விஷயங்கள் பேசப்படுகின்றன. அதனால் பிறருக்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டாலும் சரியே! ஓர் உண்மையான முஸ்லிமிற்கு இது தொடர்பாக என்ன சிந்தனை இருக்க வேண்டும்? அது தொடர்பாக இந்த சம்பவம் சிறந்த வழிகாட்டியாகும்.

### *ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:*

ஒரு சஹாபி தனது குதிரையை மற்றொரு சஹாபியிடம் விற்பதற்காகக் கொண்டு வந்தார். மேலும், அதன் விலை தோராயமாக 200 ரூபாய் என்று கூறினார். அதற்கு அந்த சஹாபி, நான் இந்த விலையில் குதிரையை வாங்க மாட்டேன். ஏனென்றால், இதன் விலை இரண்டு மடங்காக உள்ளது என்றும், உங்களுக்கு குதிரையின் விலை பற்றிய அறிவு இல்லை எனத் தெரிய வருகிறது என்றும் கூறினார். ஆனால், அதன் எஜமானர் அதிக விலையைப் பெற மறுத்து விட்டர். எனது குதிரை அதிக விலைக்கு உரியதாக இல்லாத போது நான் ஏன் அதிக விலை பெற வேண்டும்? இவ்வாறு அவர்களுக்கிடையில் விவாதம் நடந்துக் கொண்டே இருந்தது. எந்தளவுக்கு என்றால் கடைசியில் மூன்றாம் நபர் மூலமாக தீர்ப்பு பெறப்பட்டது. இது அந்த சஹாபாக்கள் வெளிப்படுத்திய இஸ்லாத்தின் ரூஹ் – உயிரோட்டமாகும். இஸ்லாத்தின் கட்டளை இது தான். அதாவது, ஒவ்வொரு நபரும் தனது உரிமையைப் பெறுவதற்கு பகரமாக, அதைப் பெறுவதற்கு சண்டையிடுவதற்குப் பகரமாக, பிறரின் உரிமையைக் கொடுப்பதற்கும், அதை நிலைநாட்டவும் முயற்சி செய்ய வேண்டும். தற்போது இந்த உயிரோட்டம் நிலை பெற்று விட்டால், பின்னர் வேலை நிறுத்தப் போராட்டங்கள் எல்லாம் தானாகவே முடிந்து விடும் என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) கூறுகின்றார்கள். குறைந்தபட்ச நன்மை என்னவென்றால், ஒருவரிடமிருந்து அவரது உரிமைக்கான குரல் வருகின்றது என்றால், அவருக்குரிய உரிமைகளைக் கொடுக்க வேண்டும். பிறரின் உரிமைகளைப் பறித்து நாம் நீண்ட காலமாக நிலைநிற்கின்றோம். அதிலிருந்து பயனடைந்து வருகின்றோம். பிறரின் உரிமைகளை தமது உரிமைகளாகக் கருதும் பழக்கம் ஏற்பட்டு விட்டது. எனவே எங்களால் பிறருக்குரிய உரிமைகளை வழங்க முடியாது என்று கூறுவது இஸ்லாமிய உயிரோட்டம் ஆகாது. (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 17, பக்கம் 678-679)

இது மாபெரும் தவறாகும். மேலும், அது இஸ்லாமிய போதனைகளுக்கு எதிரானதாகும். இன்றைய முன்னேற்றமடைந்த உலகத்திலும் கூட வேலை நிறுத்தம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதுவும் கூட சிந்தித்துப் பார்க்காமல் வழங்கப்பட்டதாகும். அதற்கு என்ன வரம்புகள் இருக்க வேண்டும்? என்று சிந்திப்பதில்லை. இன்று, இங்க U.K. –வில் ஜுனியர் மருத்துவர்களின் வேலை நிறுத்தம் ஆகும். அதன் மூலம் நோயாளிகள் சிரமங்களுக்கு ஆளாகின்றனர். தனது உரிமையைப் பெறும் பொருட்டு, நோயாளிகளை சிகிச்சை என்ற அவர்களின் உரிமையிலிருந்து விலக்கி வைக்கின்றனர். மாறாக, சில சமயம் நோயாளிகளின் உயிரோடும் விளையாடப்படுகின்றது.

எனக்கு நினைவு உள்ளது. ஜப்பான் சுற்றுப் பயணத்தின் போது ஒரு கிறிஸ்துவ பாதிரி இருந்தார். கண்ணியமான மனிதர். அவர் என்னிடம் கேள்வி ஒன்று கேட்டார். அமைதி என்பதன் பொருள் என்ன? அதை எவ்வாறு நிலைநாட்ட வேண்டும்? என்று கேட்டார். மேலும் அவர் எனது இந்தக் கேள்விக்கு எங்கேயும் மன நிறைவைத் தரும் பதில் எனக்கு கிடைக்கவில்லை எனக் கூறினார். நான் அவருக்கு கூறினேன். நான் ஏற்கனவே கூறியுள்ளேன். நீங்கள் உங்களுக்காக எதனை விரும்புவீர்களோ அதனையே பிறருக்காகவும் விரும்புங்கள். அவ்வாறு

நீங்கள் செய்யும் போது ஒருவர் மற்றவரின் உரிமையை நிலைநாட்டக் கூடியவர் ஆவீர்கள். ஒருவர் மற்றவரின் உரிமையை நிலைநாட்டும் போது அமைதியும் நிலை பெறும். ஒருவர் மற்றவருக்கு அமைதியை வழங்கக்கூடியவராகவும் திகழ்வீர்கள். அவர், இந்த விளக்கம் எனது உள்ளத்தை தொட்டு விட்டது. இதனை நான் முதன்முறையாகக் கேட்கிறேன் என்று கூறினார்.

எனவே, இன்று இஸ்லாம் தான் உலகில் ஒவ்வொரு பிரச்சனைகளுக்கும் சரியான தீர்வை வழங்க முடியும். ஆனால், அதற்கான செயல் வடிவத்தைக் காட்டாமல் நம்மால் உலகை இக்கருத்தின் பக்கம் ஏற்றுக் கொள்ளும்படி செய்ய முடியாது. ஆகுமற்ற உரிமைகளைப் பெறுவதற்கான கேள்விக்கே இஸ்லாத்தில் இடமில்லை. ஆகுமான உரிமைகளை விட்டுக் கொடுப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும். அமைதியை நிலைநாட்ட வேண்டி ஆகுமான உரிமைகளை விட்டுக் கொடுப்பதால் ஒன்றும் நேர்ந்து விடாது. சமூகத்தில் இரு தரப்பிலிருந்தும் இந்த நிலை வெளிப்பட்டால், இரண்டாம் நபர் முஃமினாக இருக்கும் போது, ஆகுமற்ற உரிமைகளைப் பெறுவது என்பது நடக்கவே நடக்காது. அவர் ஆகுமற்ற உரிமைகளைப் பெறவே மாட்டார். ஆனால் வேதனை என்னவென்றால், சில முறை நீதிமன்றத்தில் சில வழக்குகள் வருகின்றன. நமது ஜமாஅத்திலும் கூட அவ்வாறு வருகிறது. ஒரு சகோதரர் தனது மற்றொரு சகோதரரின் உரிமையைப் பறிக்கின்றார் அல்லது பிற அன்பர்களின் உரிமைகளைப் பறிக்கின்றனர். நாம் இதன் பக்கம் கவனம் செலுத்தினால் நமது கலாவின் நீதிமன்றத்தின் பல்வேறு வழக்குகள் முடிவுக்கு வந்து விடும். சண்டை, சச்சரவுகளை முடிவுக்கு கொண்டு வர இஸ்லாம் நமக்கு என்ன சிந்தனையை ஊட்டுகின்றது? மேலும் சஹாபாக்களின் என்ன முன்னுதாரணம் நம்முன் உள்ளது?

அறிவுப்புகளில் வருகின்றது: ஒருமுறை இமாம் ஹஸன் மற்றும் இமாம் ஹுஸைன் இருவருக்கும் இடையில் ஒரு விஷயத்தில் கருத்து வேறுபாடு உருவானது. அண்ணன் தம்பிகளுக்கிடையில் சில நேரங்களில் கோபமூட்டும் செயல்கள் வெளிப்பட்டு விடுவதுண்டு. தர்க்கம் ஏற்பட்டு விடுவதும் உண்டு. ஹஸ்ரத் இமாம் ஹஸன் அவர்கள் மிகவும் பக்குவப்பட்ட இயல்புடையவர். மென்மை குணமுள்ளவர். ஆனால் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் இயல்பில் வேகம் இருந்தது. அவர்களுக்கிடையில் சண்டை ஏற்பட்ட போது ஹஸ்ரத் ஹுஸைன் அவர்களிடமிருந்து அதிக கடினம் வெளிப்பட்டது. ஆனால் இமாம் ஹஸன் பொறுமை செய்தார்கள். அந்த சண்டையின் போது வேறு சில சஹாபாக்களும் இருந்தனர். சண்டை முடிவடைந்த பிறகு, இரண்டாம் நாள், ஒரு நபர் ஹஸ்ரத் இமாம் ஹஸன் வேகமாக எங்கோ செல்வதை கண்டார்! அவர் அன்னாரிடம் எங்கே செல்கின்றீர்கள்? எனக் கேட்டார்? ஹஸ்ரத் ஹஸன் அவர்கள் நான் ஹஸ்ரத் ஹுஸைனிடம் மன்னிப்பு கேட்க செல்கிறேன் என்று கூறினார்கள். அதற்கு அந்த நபர் கூறினார்! நீங்கள் ஏன் மன்னிப்பு கேட்க செல்கின்றீர்கள்? சண்டை நடந்த போது நானும் அங்கேதான் இருந்தேன். ஹஸ்ரத் ஹுஸைன் உங்களிடம் கடினமாக நடந்தார் என்பதை நான் அறிவேன். நீங்கள் அவரிடம் மன்னிப்பு கேட்பதற்கு பகரமாக, அவரல்லவா? உங்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்! ஹஸ்ரத் ஹஸன் கூறினார்கள் அது சரிதான் அவர் என்னிடம் கடினமாக நடந்து கொண்டதன் காரணமாகவே நான் மன்னிப்பு கேட்க அவரிடம் செல்கிறேன். ஏனென்றால் ஒரு சஹாபி என்னிடம் கூறினார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒருமுறை கூறினார்கள். இரண்டு நபர்கள் தங்களுக்கிடையில் சண்டையிட்டுக் கொண்டால் அவர்களில் எவர் முதலில் சமாதானம் செய்து கொள்வாரோ அவர் மற்றவரை விட 500 ஆண்டுகளுக்கு முன்னதாக சொர்க்கத்தில் நுழைந்துவிடுவார். எனவே இதனைக் கேட்டு எனது உள்ளத்தில் இந்த எண்ணம் தோன்றியது. அதாவது நேற்று ஹஸ்ரத் ஹுஸைன் என்னை ஏசி பேசினார். மேலும் என்னிடம் கடினமாக நடந்துகொண்டார். இப்போது ஹஸ்ரத் ஹுஸைன் மன்னிப்பு கேட்பதற்காக என்னிடத்தில் முதலில் வந்துவிட்டால், என்னிடம் சமாதானம் செய்துகொண்டால் பின்னர் அந்நிலையில் நான் ஈருலகிலும் பின்தங்கி விடுவேன். இவ்வுலகிலும் என் மீது கடுமை காட்டப்பட்டது. மேலும் மறுவுலகிலும் நான் பின்தங்கிவிடுவேன். எனவே, நான் இவ்வாறு முடிவு செய்தேன். என்னிடம் கடுமை காட்டப்பட்டுவிட்டது. நான் அவரைவிட முதலில் சென்று மன்னிப்பு கேட்டால் அதற்கு பகரமாக சொர்க்கம் அவரைவிட 500 ஆண்டுகளுக்கு முன்னதாக எனக்கு கிடைத்துவிடும். (அல் ∴பஸ்ல் 23 மே 1944, பக்கம் 4, பத்தி 2-3, தொகுதி 32, எண்.119) ஆக, இந்த சிந்தனையைத்தான் நாம் நம்மீது செயல்படுத்த வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவகூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவர்களிடமிருந்து நான் நகைச்சுவை ஒன்றை கேட்டேன். அது மக்காமாதே ஹரீரி அல்லது வேறு ஒரு புத்தகத்தின் பகுதியாக கூட இருக்கலாம்.

அன்னார் கூறிவந்தார்கள்: ஒரு விருந்தாளி குளிப்பதற்காக ஓரிடத்திற்குச் சென்றார். குளியலறையில் எஜமானர் விருந்தினரின் தொண்டிற்காக ஏராளமான வேலைக்காரர்களை வைத்திருந்தார். சில நாடுகளில் சில குளியலறை இருக்கும். அங்கு வரும் விருந்தினர்களுக்கு சேவகர்கள் மசாஜ் செய்து விடுவார்கள். மேலும் அவர்கள் விருந்தினர்களைக் குளிக்கவும் வைப்பார்கள். அந்த நேரத்தில் எஜமானர் அங்கு இருக்கவில்லை. அந்த விருந்தாளி குளிப்பதற்காக குளியலறையில் நுழைந்தவுடன் அனைத்து வேலைக்காரர்களும் அவரைச் சுற்றி வளைத்து விட்டனர். தலையை மிக எளிதாக மசாஜ் செய்து விட முடியும். எனவே அனைவரும் ஒன்று சேர்ந்து தலையைப் பிடித்து கொண்டனர். ஒருவர், இது எனது தலையாகும் என்று கூறினார். எனக்குரியதாகும் என்று மற்றொருவர் கூறினார். இது எனது தலையாகும். இவ்வாறு அதில் அவர்களிடையே சண்டை மூண்டது. ஒருவர் மற்றவரை கத்தியால் குத்தி விட்டார். அவர் காயமுற்றார். சப்தம் அதிகமானதால் போலீஸும் வந்து சேர்ந்தது. விஷயம் நீதிமன்றம் வரை சென்றடைந்தது. நீதிமன்றத்திலும் ஒரு சேவகர் கூறினார். இது என்னுடைய தலையாகும்? மற்ற நபரும் இது என்னுடைய தலையாகும் என்று கூறினார். நீதிபதி அந்த விருந்தாளியிடம் இது யாருடைய தலை? என்று கேட்டார். அதற்கு விருந்தாளி, ஹுஸூர் இவர்கள் முட்டாள்கள். இவர்களின் கூற்றில் எனக்கு ஆச்சரியம் இல்லை. நீங்களும் கேள்வி கேட்டது தான் ஆச்சரியமாக உள்ளது. ஏனென்றால் தலை அவருடையதும் கிடையாது. இவருடையதும் கிடையாது. மாறாக தலை என்னுடையதாகும் என்று கூறினார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த உதாரணத்தைக் கூறியதன் பொருள் என்னவென்றால், உலகியல் சண்டைகள் வீணானதாகும். என்னுடையது; உன்னுடையது என்று என்ன உள்ளது? அடிமைக்கென்று எதுவும் இருப்பதில்லை. எவர் தன்னை அப்துல்லாஹ் – இறையடியார் என்று கூறுவாரோ அப்போது அவருக்கென்று எதுவும் இருப்பதில்லை. ஒரு உண்மையான முஸ்லிமைப் பற்றி கூறப்படுகின்றது. மேற்கூறப்பட்ட சம்பவம் இந்தக் கருத்தைக் கொண்டதாகும். அல்லாஹ்வின் அடியாரான ஒருவர் என்னுடையது; உன்னுடையது என்ற கேள்வியெல்லாம் கேட்பதில்லை. அவரோ அல்லாஹ்வின் அடியார் ஆவார். எனவே, தற்போது அவருக்கென்று எதுவும் இருப்பதில்லை. அனைத்தும் இறைவனுக்குரியதாகி விடும். ஒருவர் உண்மையான மூஃமினாக ஆகி விடும்போது அனைத்துமே அல்லாஹ்விற்குரியதாகும் என்றே அவர் கூறுவார். அதற்குப் பிறகு எனக்குரியது; உனக்குரியது; என்ற கேள்வி எப்படி எஞ்சியிருக்க முடியும்?

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெயர் அப்துல்லாஹ் என வைக்கப்பட்டுள்ளது. 'லம்மா காம அப்துல்லாஹ்' என திருக்குர்ஆனில் வருகின்றது. எனவே இறைவனின் அடிமையாக நாம் ஆகி விட்ட பிறகு நம்முடையது என்று எதுவும் இருப்பதில்லை. அனைத்துமே இறைவனுக்கு உரியதாகி விடும். எனவே, திருக்குர்ஆனில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. நாம் நம்பிக்கையாளர்களிடமிருந்து அவர்களின் உயிரையும், செல்வத்தையும் பெற்றுக் கொண்டோம் என்று அல்லாஹ் கூறுகின்றான். நண்பர், அன்பர், உறவுகள் இவை அனைத்தும் உயிரில் அடங்கும். மற்ற விஷயங்கள் செல்வத்தில் அடங்கும். இந்த இரண்டே விஷயங்களுக்கு தான் மனிதன் உரிமையாளனாக உள்ளான். அல்லாஹ் கூறுகின்றான்: நாம் இவ்விரண்டு விஷயங்களையும் நம்பிக்கையாளர்களிடமிருந்து வாங்கி விட்டோம். உயிரையும் பெற்றுக் கொண்டோம். அவர்களின் செல்வத்தையும் பெற்றுக் கொண்டோம். இதன் பொருள் என்னவென்றால், உங்களிடையே இன்ன இன்ன பொருள் என்னுடையது; இன்ன இன்ன பொருள் அவருடையது என்ற சண்டை இருத்தல் கூடாது. என்னுடையது; உன்னுடையது என்ற கேள்விக்கே இடமில்லை. நீங்கள் சென்றடைய வேண்டிய இலக்கை அடைய கவனம் செலுத்துங்கள். இந்த விஷயத்தை விட்டு விடுங்கள். இன்ன நபர் ஏன் President ஆனார். இப்போது இங்கு தேர்தல் தொடர்பான பொறுப்பாளர்கள் தொடர்பான விஷயம் கூறப்படுகின்றது. சிலர் சண்டையிடுகின்றனர். இவர் எவ்வாறு இமாமுஸ்ஸலாத் ஆனார்? இவருக்குப் பின் நின்று நாங்கள் தொழமாட்டோம் என சண்டையிடுகின்றனர். இவர் ஏன் President ஆனார்? இன்ன நபர் ஏன் Secretary ஆகவில்லை? இன்ன நபர் ஏன் ஆகவில்லை? அல்லது இன்ன நபர் எதுவரை இமாமாக மாட்டாரோ அதுவரை நாங்கள் இன்ன நபர் பின்னால் நின்று தொழ மாட்டோம் என்று கூறுகின்றனர். (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 16, பக்கம் 270-271) இப்படிப்பட்ட மக்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களது காலத்தில் இருந்தனர். தற்போது இல்லை என சிலர் நினைக்கலாம். தற்போதும் இதுபோன்ற புகார்கள் கிடைத்துக் கொண்டு வருகின்றன. அக்காலத்தில் சஹாபாக்களும் இருந்தனர். அவர்கள் இதுபோன்ற கோணலான மக்களை சீர் செய்து வந்தனர். ஆனால் தற்போது நாமோ நபித்துவ காலத்திலிருந்து தொலைவில் செல்கின்றோம். எதிர்காலத்தில் இன்னும் தொலைவில் சென்று விடுவோம். எனவே, நாம் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். நான் இதற்கு முன்பும் இதனைக் கவனமூட்டியுள்ளேன். நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நாம் எவ்வாறு இறை அடியாராக ஆக வேண்டும்? என்ற விஷயத்தை முன்பை விட அதிகமாக புரிய வேண்டும். மேலும் தமது பிடிவாதம் மற்றும் நான் என்ற அகந்தையைக் கை விடுதல் வேண்டும். மேலும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற முயற்சி செய்ய வேண்டும்.

தேர்தல் நேரத்திலும் இதுபோன்ற கேள்விகள் எழுந்து கொண்டிருக்கும். சிலவேளை சில சூழ்நிலையில் பெரும்பான்மையான மக்களின் ஓட்டிற்கு எதிராக முடிவு எடுக்கப்படும் போது, இதுபோன்ற கேள்விகள் எழுந்த வண்ணம் உள்ளன. இந்த வருடமும் தேர்தலுக்குரிய வருடமாகும். ஜமாஅத் அளவில் இவ்வருடம் தேர்தல் நடக்கும். அந்த அடிப்படையில் ஒவ்வொருவரும் தத்தமது எண்ணத்தை சரி செய்வது அவசியமாகும். துஆ செய்து அனைத்து தொடர்புகளுக்கும் உறவுகளுக்கும் அப்பாற்பட்டு, தனது உரிமையை சரியாக பயன்படுத்தி தனது கருத்தைத் தெரிவிக்க வேண்டும். அதற்குப் பிறகு வழங்கப்படும் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். முழுமையாக சுயநலத்திலிருந்து விலகி உங்கள் முடிவை எடுக்க வேண்டும். கிளை அமைப்புகளிலும் இதுபோன்ற கேள்விகள் எழுகின்றன. இரண்டு நாட்களுக்கு முன்னர் ஒரு நாட்டில் ஒரு மஜ்லிஸின் லஜ்னா தேர்தல் நடைபெற்றது. அங்கிருந்து எனக்கு கடிதம் வந்து விட்டது. இன்ன நபரை ஏன் பொறுப்பில் நியமித்தீர்கள். இன்ன நபரை ஏன் நியமிக்கவில்லை. இன்ன பெண்மணி இப்படிப்பட்டவள் அப்படிப்பட்டவள் என்று எழுதுகின்றனர். எனவே இதுபோன்ற வீண் விஷயங்களிலிருந்து நாம் விலக வேண்டும். அந்த குறிப்பிட்ட காலம் வரை எவர் நியமிக்கப்பட்டாலும் அவருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அடுத்து, ஒரு விஷயத்தின் பக்கம் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு நம்பிக்கையாளர் உறுதியான எண்ணத்துடன் முயற்சி செய்து, அந்தக் காரியத்தை நிறைவேற்ற வேண்டும். அதிகாரியாக இருக்கட்டும் அல்லது பொறுப்பாளராக இருக்கட்டும் அவர்கள் தமக்கு கீழ் பணி செய்பவர்களைச் சார்ந்து இருத்தல் கூடாது. மாறாக, நேரடியாக தாமே அனைத்துப் பணிகளையும் மேற்பார்வையிட வேண்டும். அதில் ஈடுபட முயற்சி செய்ய வேண்டும். அப்போது தான் பணி சரியான முறையில் நல்ல முடிவை எட்ட முடியும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறி வந்தார்கள். ஒரு செல்வந்தர் இருந்தார். அவருக்கு ஒரு விருந்தினர் மாளிகை இருந்தது. ஒரு பெரிய எண்ணிக்கையிலான மக்களான ஏழைகள் அங்கு உணவு உண்டு வந்தனர். ஆனால் அங்கு நிர்வாகச் சீர்கேடு மிகப்பெரிய அளவில் இருந்தது. அந்த செல்வந்தர் கண்காணிப்பதில் ஆர்வமற்றவராக இருந்தார். அதன் பக்கம் அவர் கவனம் செலுத்துவதில்லை. ஊழியர்களோ மோசடி செய்பவர்களாகவும் நேர்மையற்றவர்களாவும் இருந்தனர். சாமான்களை மிக அதிக விலைக்கும் குறைவான அளவிலும் வாங்கி வந்தனர். அதில் கொஞ்சம் தமது வீட்டிற்கு கொண்டு சென்றனர். பின்னர் உணவு சமைப்பவர்கள் கொஞ்சம் சாப்பிட்டு விடுவார்கள். கொஞ்சம் தமது உறவினர்களுக்கு கொடுத்து விடுவார். அதே போன்று ஸ்டோர் ரூம் திறந்தே இருக்கும். முழு இரவும் நாய்களும், நரிகளும் சாமான்களைத் தின்று வீணடித்துக் கொண்டிருந்தன. அதன் விளைவாக அவர் மிகவும் கடனாளியானார். 20 ஆண்டு கால நிர்வாக சீர்கேட்டிற்குப் பிறகு அவரிடம், நீர் கடனாளியாகி விட்டீர் எனக் கூறப்பட்டது. அவரது இயல்பில் வள்ளல் தன்மை இருந்தது. எனவே, விருந்தினர் இல்லத்தை மூடுவதை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. கடன் சுமையை நீக்கும் எண்ணம் அவரிடம் மேலோங்கி இருந்தது. தனது நண்பர்களை அழைத்தார். தனது குறையை அவர்களிடம் கூறவில்லை. அவ்வாறு எவரும் கூறுவதும் கிடையாது. அவர்களிடம் நான் கடனாளியாகி விட்டேன் எனக் கூறினார். அவர்கள் அனைவரும் ஸ்டோர் ரூம் திறந்தே இருக்கின்றது என்று கூறினர். இரவு நேரத்தில் நாய்களும், நரிகளும் உணவுச் சாமான்களை வீணாக்கி விடுகின்றன. இவ்வாறு ஏராளமான சாமான்கள் வீணாகி விடுகின்றது. எனவே ஸ்டோர் ரூமில் ஒரு கதவு போடப்பட்டால் பெரிய அளவில் சேமிப்பு ஏற்படும் எனக் கூறினர். அவர் கதவு மாட்டுவதற்கு கட்டளையிட்டார். அவ்வாறு கதவும் போடப்பட்டது. இது கதைகளுள் ஒரு கதையாகும். கதைகளில் நாய்களும், நரிகளும் கூட பேசுவதுண்டு.

அவர்கள் கூறுகின்றார்கள்: இரவில் நரிகளும், நாய்களும் ஸ்டோர் ரூமில் கதவு மாட்டப்பட்டிருப்பதைக் கண்டு மிகவும் ஊலையிட்டன. திடீரென பெரிய மூத்த நரி ஒன்று வந்தது. ஏன் சப்தமிடுகின்றீர்கள்? எனக் கேட்டது. அதற்கு அந்த நாய்களும், நரிகளும் கூறின. ஸ்டோர் ரூமில் கதவு போடப்பட்டுள்ளது. இனி எங்கிருந்து நாம் சாப்பிட முடியும்? எனக் கூறியது. எங்கள் பகுதியைச் சார்ந்த அனைத்து நாய்களும், நரிகளும் இங்கிருந்து தான் உணவு உண்டன. அதற்கு அந்தப் பெரிய நரி கூறியது. நீங்கள் தேவையில்லாமல் சப்தமிட்டு, நேரத்தை வீணடிக்கின்றீர்கள். எந்த நபர் 20 ஆண்டு காலம் தமது வீடு கொள்ளையடிக்கப்படுவதைப் பார்த்து வந்தாரோ அதை தடுப்பதற்கு எந்த ஏற்பாட்டையும் செய்யவில்லையோ அந்த நபரின் ஸ்டோர் ரூமின் கதவை யார் அடைக்கப் போகிறார்? அவர் ஒன்றும் கண்காணிக்கப் போவதில்லை. எனவே, அச்சப்படத் தேவையில்லை என்று கூறியது.

ஆக, இக்கதையில் இவ்விஷயம் கூறப்பட்டுள்ளது. அதாவது, விரும்பினால் என்பதற்கும் விரும்புதல் என்பதற்கும் பெரிய வித்தியாசம் உள்ளது. நாய்களும், நரிகளும் கூச்சலிட்டன. அவர் விரும்பினால் கதவை பூட்டி விட்டால் நாம் எங்கிருந்து உண்போம்? எனக் கூச்சலிட்டன. அவைகளில் அனுபவம் வாய்ந்த நரி, அந்தப் பணக்காரர் விரும்பப் போவதில்லை. அவர் கவனம் செலுத்தப் போவதில்லை. பின்னர் ஏன் கூச்சலிடுகின்றீர்கள்? என்று கூறியது.

இக்கதையை எடுத்துக் கூறிய பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நமது ஜமாஅத்தின் உறுப்பினர்கள் விருப்பம் கொள்ளவே இல்லையென்றால் ஒன்றுமே நடக்காது. ஆனால் அவர்கள் விருப்பம் கொண்டால் பெரிய பெரிய கஷ்டமான பணிகளையும் சில தினங்களில் செய்து முடித்து விட முடியும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எங்களது சிறு வயது கதைகளில் அலாவுதீனின் அற்புத விளக்கு கதை மிகவும் பிரபலமானதாகும். அலாவுதீன் ஒரு ஏழை மனிதராக இருந்தார். அவருக்கு ஒரு விளக்கு கிடைத்தது. அவர் அந்த விளக்கை தேய்க்கும் போது ஒரு ஜின் ஒன்று வெளிவரும். இது குழந்தைகளுக்கான கதையாகும். அவர் அதனிடம் என்ன கூறினாலும் அதனை உருவாக்கி அது முன்னால் வைத்து விடும். உதாரணமாக, அவர் அதனிடம் மாளிகையை உண்டாக்குமாறு கூறினால் உடனடியாக அது மாளிகையை கட்டி முடித்து விடும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நாங்கள் குழந்தைப் பருவத்தில் அறிவில்லாத போது அலாவுதீன் சம்பவம் உண்மையான சம்பவம் என நினைத்தோம். ஆனால் பெரியவர்களானதும் அது வெறும் கதை என புரிந்து கொண்டோம். ஆனால் அதன் பிறகு இளமையைக் கடந்து முதுமையை அடைந்த போது அது சரியானது தான் எனத் தெரிய வந்தது. இங்குள்ள மக்கள் ஆச்சரியப்பட்டிருக்கலாம். இளமையைக் கடந்து முதுமையை அடைந்ததும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அந்தக் கதையை சரியானது என்று எவ்வாறு கூறினார்கள்? என எண்ணலாம்.

அலாவுதீனின் விளக்கு கண்டிப்பாக உள்ளது. ஆனால் அது எண்ணெய் விளக்கல்ல. மாறாக, அந்த விளக்கு மன உறுதி மற்றும் திட நம்பிக்கை என்ற விளக்காகும். எவருக்கு இறைவன் அந்த விளக்கை வழங்கி விடுவானோ அவர் அதனை செயல்படுத்துகிறார். உறுதி, திடம் என்பது இறை பண்புகளில் அடங்கும். எவ்வாறு இறைவன் குன் –ஆகுக என்று கூறுவதால் ஆகி விடுகின்றதோ அதே போன்று அவனை பின்தொடர்ந்து அவனிடம் உதவி தேடியவாறு செயல்பட வேண்டும். இவை அனைத்தும் நிபந்தனையாகும். நினைவில் கொள்ள வேண்டும். ஒரு மனிதன் குன் – ஆகுக என்று கூறினால் அது ஆகி விடும்.

சிறு வயதில் நாங்கள் அலாவுதீன் விளக்கு உண்மை என நம்பினோம். ஆனால் இளமையில் அந்த எண்ணம் நேர்மாற்றமானது. ஆனால் முழுமையில் ஒரு நீண்ட அனுபவத்திற்கு பிறகு, அலாவுதீனும் அற்புத விளக்கும் என்ற கதை உண்மையானது தான் என தெரிய வந்துள்ளது. ஆனால் அது உவமையாகக் கூறப்பட்ட கதையாகும். விளக்கு என்பது பித்தளை விளக்கல்ல. மாறாக, மனஉறுதி மற்றும் திட நம்பிக்கை என்ற விளக்காகும். அது தேய்க்கப்பட்டால் வெளிப்படையில் எவ்வளவு பெரிய பணியாக இருந்தாலும் சரி, அது உடனடியாக ஆகி விடுகின்றது (அல் ஃபஸ்ல் 24 ஜனவரி 1962, பக்கம் 2-3, தொகுதி 51/16, எண்.20) எனவே, நம்மில் ஒவ்வொருவரின் சிந்தனையும் இவ்வாறு இருக்க வேண்டும். நாம் விரும்பினால் என்ற நிலையில் இருக்காமல் விரும்புதல் என்ற நிலையை அடைய வேண்டும். மேலும் விரும்பியவுடன் தனது அனைத்து ஆற்றல்களுடன் அந்த பணியைச் செய்ய வேண்டும். அல்லாஹ்விடத்தில் உதவி தேட வேண்டும். சில மக்கள் சில முறை விரும்பிய பிறகும் சில பணிகள் நடைபெறுவதில்லை. அதற்கு காரணம் அவர்களின் விரும்புதல் என்பது மனதார இருப்பதில்லை. அதனுடன் கூறப்பட்ட நிபந்தனைகளைக் கைகொள்வதில்லை. மனஉறுதியும், தைரியமும் இருப்பதில்லை. கடின உழைப்பும் செய்வது கிடையாது. மாறாக மனதில் நாங்கள் விரும்புகிறோம் என்ற எண்ணம் மட்டுமே இருக்கின்றது.

குறிப்பாக, நான் இந்த விஷயத்தை குறிப்பிடுகிறேன். தொழுகை பற்றிய கேள்வி எழுகின்றது. பலர் என்னிடம் கூறுகின்றனர். எங்களுக்காக துஆ செய்யுங்கள். நாங்கள் தொழுகைகளில் நிரந்தரமாக நிலைபெற விரும்புகிறோம். ஆனால், எங்களால் முடிவதில்லை. ஆனால் மற்ற பணிகளை விரும்பும் போது அதை செய்து விடுகின்றனர். தொழுகையை நிலை நாட்ட மனமார விரும்புவதில்லை. தனது ஆற்றல்களை அதற்காக பயன்படுத்துவது கிடையாது. அல்லாஹ்விடத்தில் உதவி தேடுவது கிடையாது. எனவே தொழும் பழக்கமும் ஏற்படுவதில்லை. அதுபோன்ற மக்களின் விரும்புதல் என்பது விருப்பமற்றதாகவே உள்ளது. மனிதன் ஒன்றை விரும்பி பணி நடக்கவில்லை என்பது இயலாத காரியமாகும். தொழுகை என்பது அவர்களை பொருத்தவரையில் இரண்டாம்பட்சமானதாக உள்ளது. அவர்கள் உலக வேலைகளுக்கே முன்னுரிமை கொடுக்கின்றனர். அது தவறான வழிமுறையாகும். எனவே அதன்படி செயல்படுவதில்லை. மனிதன் ஒன்றை விரும்பி திடமான எண்ணமும் இருந்து அவனால் அந்தப் பணியைச் செய்ய முடியவில்லை என்பது எவ்வாறு சாத்தியமாகும்? மனிதனின் சோம்பலும் ஆர்வமற்றத் தன்மையும் தோல்விக்கு

காரணமாக அமைகின்றது. அவ்வாறிருக்க, அவன் தேவையின்றி விரும்புகிறோம் எனக் கூறுகின்றான்.

ஒரு சம்பவத்தை அன்னார் கூறுகின்றார்கள்: நாங்கள் சிறு வயதில் ஒரு கதையைக் கேட்டு சிரித்து வந்தோம். ஆனால் உண்மையில் அது சிரிப்பதற்காக அல்ல. மாறாக, அது அழுவதற்காக உருவாக்கப்பட்ட கதையாகும். அதில் தற்போதைய காலத்தின் முஸ்லிம்களின் நிலையைப் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. அக்கதையை உருவாக்கியரை மவ்லவிகள் துன்புறுத்தி விடக் கூடாது என்பதற்காக அவர் சூசகமாக முஸ்லிம்களின் நிலைகளைக் கூறியுள்ளார். அந்தக் கதை இதுவாகும். ஓர் அஹ்மதியும் அதுபோன்ற செய்கைகளைச் செய்தால் தன்னை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அந்தக் கதை இவ்வாறாகும்.

ஒரு வேலைக்காரி இருந்தாள். அவள் ஸஹர் நேரத்தில் தொடர்ந்து கண் விழித்து வந்தாள். அவள் ஒரு எஜமானியின் வீட்டில் வேலை பார்த்து வந்தாள். ஆனால் அவள் நோன்பு வைப்பதில்லை. எஜமானி நினைத்தார். எனக்கு உதவி செய்வதற்காக இவள் ஸஹர் நேரத்தில் கண் விழிக்கின்றாள் என எண்ணினார். அந்த வேலைக்காரி நோன்பு வைப்பதில்லை. எனவே ஸஹர் நேரத்தில் தேவையின்றி அவளுக்கு ஏன் தொந்தரவு கொடுக்க வேண்டும்? அந்த நேரத்துப் பணிகளை நானே செய்து கொள்வேன் என எஜமானி நினைத்தார். எனவே, 2–3 நாட்கள் கழித்து எஜமானி அந்த வேலைக்காரியிடம், பெண்ணே! நீ ஸஹர் நேரத்தில் கண் விழிக்க வேண்டாம். அந்த நேரத்தின் வேலையை நாங்களே பார்த்துக் கொள்வோம். அந்த நேரத்தில் நீ கஷ்டப்பட வேண்டாம் எனக் கூறினார். அதைக் கேட்டு விட்டு அவள் மிகவும் ஆச்சரியத்துடன் தனது எஜமானியை அந்தப் பெண் பார்த்தார். நீங்கள் என்னிடம் என்ன கூறுகின்றீர்கள்? நானோ தொழுவதில்லை. நோன்பு நோற்பதும் இல்லை. ஸஹரும் உண்ணா விட்டால் நான் காஃபிராக விடுவேனே என்றாள்.

உண்மையில் இக்கதையில் எந்த முஸ்லிம்கள் தொழுகையில் கவனம் செலுத்துவதில்லையோ அவர்களின் நிலையைப் பற்றி கூறப்பட்டுள்ளது.

அவர்கள் கூறுகின்றார்கள்: இதனை நீங்கள் வேறொரு வகையில் கூறலாம். ஒரு முஸ்லிமிடம் ஜுமுஅத்துல் விதாவைப் பற்றி கூறுகின்றார்கள். உண்மையில் ஒவ்வொரு தொழுகையிலும் அவர்களின் நிலை இப்படித்தான் உள்ளது. மியான்! ஜுமுஅத்துல் விதாவால் என்ன கிடைக்கும்? நீங்கள் ஏன் தேவையின்றி உங்களை துன்பங்களுக்கு ஆளாக்கிக் கொள்கின்றீர்கள். மற்ற ஜுமுஆக்களை தொழுதது போன்று இந்த ஜுமுஆவையும் தொழுதீர் என்று நீங்கள் கூறினால் அவர் மிகவும் ஆச்சரியத்துடன் உங்களைப் பார்க்கத் தொடங்கி விடுவர். சகோதரரே! நீர் என்ன கூறுகின்றீர்? நான் தினமும் பள்ளிவாயிலுக்கு வருவது கிடையாது. நான் நோன்பு நோற்பதும் கிடையாது. ஜுமுஅத்துல் விதா தொழவில்லையென்றால் நான் காஃபிராகி விடுவேனே! என்று கூறுவர். ஒரு நேரம் மட்டும் வந்து தொழுது விட்டு கடமை நிறைவேறி விட்டது என்று எண்ணுவதும் கூட நகைப்பிற்குரியது தான். எவர்கள் ஒரு நேரம் பள்ளிவாயிலுக்கு வந்து தொழுவதால் கடமை நிறைவேறி விட்டது என எண்ணுகின்றனரோ அவர்களது இந்த செயலும் நகைப்புக்குரியதாகும். (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 23, பக்கம் 438-439) எவர்கள் தொழுகைகளின் பக்கம் தொடர்ந்து கவனம் செலுத்துவதில்லையோ அவர்கள் இப்படிப்பட்ட கூட்டத்தையே சார்ந்தவராவார். ஐவேளை தொழுகை ஒவ்வொரு வயது வந்த அறிவு படைத்த முஸ்லிம்களின் மீதும் கடமையாகும். ஆண்களுக்கு பள்ளிவாயிலில் வந்து தொழுவது அல்லது ஜமாஅத்தாகத் தொழுவது கடமையாகும். அதற்கான ஏற்பாடு இருக்க வேண்டும் அல்லது நாங்கள் வயது வந்தவர்கள் இல்லை என்றோ அல்லது அறிவற்றவர்கள் என்றோ கூறினால் பரவாயில்லை. இந்த இரண்டு விஷயமும் இல்லையென்றால் பின்னர் தொடர்ந்து ஜமாஅத்தாக தொழுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

ஒரு அறிவிப்பை செய்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியதைக் கேட்டேன். அன்னார் கூறினார்கள்: ஒரு அரசர் அல்லது அமீர் ஓரிடத்திற்குச் செல்லும் போது அவரது நெருங்கிய வட்டாரமும் அவருடம் செல்லும். அவர்களுக்கு உள்ளே செல்ல அனுமதி தேவைப்படுவதில்லை. இன்றும் கூட பாருங்கள். அமைச்சர் வருகின்றார் என்றால் கூடவே வேறு சிலரும் வருகின்றனர். அவர்களுடன் பாதுகாப்பு (Protocal) அதிகாரிகள் இருப்பர் அல்லது அவர்களும் சேர்ந்தே வருகின்றனர். அவர்கள் அவருடன் சேர்ந்து வர அனுமதி பெறப்படுவதில்லை. அக்காலத்தில் ஒரு வைஸ்ராய் கவர்னரை அழைத்தார். அப்போது இந்தியா பாகிஸ்தானில் ஆங்கிலேயே ஆட்சி நடந்து வந்தது. அந்த வைஸ்ராய் கவர்னரை விருந்திற்கு அழைத்தார் என்றால் அவரது ஊழியர்களும் எவ்வித அழைப்புமின்றி அவருடன் செல்வர். அதாவது அவரது மெய்க்காப்பாளர்களும் தொண்டர்களும் அவருடன் செல்வர். எனவே அவர்கள் கூறினார்கள்: உங்களது நிலை எவ்வளவு கீழானதாக இருந்தாலும், நீங்கள் வானவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டால் அவர்கள் எங்கு சென்றாலும் நீங்களும் அவர்களுடன் செல்வீர்கள். அல்லாஹ்வுடன் தொடர்பு ஏற்பட்டால், அவனது மலக்குகளுடனும் தொடர்பு ஏற்படும். நீங்கள் அவர்களது ஊழியர்களில் இணைந்து விடுவீர்கள். அவர்கள் மக்களின் உள்ளம் மற்றும் மூளையில் சென்றால் நீங்களும் அவர்களுடன் செல்வீர்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: எனவே நீங்கள் அந்த மகத்துவமிக்க ஆற்றலைப் புரிந்து கொள்ளுங்கள். அல்லாஹ் அதனை உங்களுக்காக உருவாக்கியுள்ளான். உங்களது வலிமை ஆன்மீகத்தோடு தொடர்புடையதாகும். நீங்கள் அதற்கு வலுவூட்ட மலக்குகளுடன் அதிகமாக தொடர்பை ஏற்படுத்துங்கள். அப்போது உங்களுக்கு மக்களின் உள்ளம் வரை சென்றடைய முடியும். உங்களுக்கு மக்களின் உள்ளம் வரை சென்றடையும் நிலை ஏற்பட்டு விட்டால் பின்னர் அனைத்து திரைகளும் அகன்று விடும். எங்கு இறைவனின் ஒளி சென்றடையுமோ நீங்களும் அங்கு சென்றடைவீர்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அக்காலத்தில் ஜல்ஸாவில் வருபவர்களுக்கு அறிவுரை கூறினார்கள்: நீங்கள் உங்களின் பொறுப்புகளை உணருங்கள். எந்த ஆர்வத்துடன் இங்கு வருகை தந்துள்ளீர்களோ அதனை முழுமை செய்ய ஏற்பாடு செய்யுங்கள். எவ்வாறு சில மக்கள் கப்பலைப் பார்ப்பதற்காக முதலில் செல்கின்றனரோ அதுபோன்று நீங்களும் இங்கு வரக்கூடாது. அல்லாஹ்வுடன் தொடர்பை உருவாக்குங்கள். அல்லாஹ்வுடன் தொடர்பு உருவானதன் விளைவாக அவனது மலக்குகளுடனும் தொடர்பு ஏற்படும். பின்னர் இந்த ஆன்மீகம் மக்களின் மூளைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் போது உங்களின் பணிகளை வானவர்கள் செய்து கொண்டிருப்பர். மேலும் அவர்கள் எங்கு செல்வார்களோ அங்கு உங்களது பெயரையும் எட்ட வைத்து விடுவார்கள். ஏனென்றால் உங்களது நிய்யத் நல்லதாக இருக்கின்றது. ஆன்மீகத்தில் உங்களுக்கு முன்னேற்றம் உள்ளது. நீங்கள் இறைவனுக்காக பணி செய்கின்றீர்கள். (அல் ∴பஸ்ல் 9 ஜனவரி 1955, பக்கம் 3, பத்தி-1, தொகுதி 44/9, எண்.8). எனவே இந்த அடிப்படை விதியை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

ஓரிடத்தில் ஒன்று கூடும் போது அது ஜல்ஸாவாக இருந்தாலும், இஜ்திமாவாக இருந்தாலும் சரி, ஆன்மீக முன்னேற்றத்திற்காக ஒன்று கூடும் போது, அதனை அடைவதற்காகவும் முயற்சி செய்ய வேண்டும். மேலும் தமது சபைகளை தற்காலிக ஆன்மீக சபைகளாக ஆக்கக் கூடாது. மாறாக, நிரந்தரமான ஆன்மீக தாக்கங்களைக் கொண்டதாகவும் ஆக்க வேண்டும். மலக்குகளும் எல்லா இடத்திலும் நமக்கு உதவி செய்யக் கூடியவர்களாக ஆகி விட வேண்டும். நாம் எங்கு முயற்சி செய்தாலும், அங்கு மலக்குகள் நுழைந்து நமது முயற்சிகளை வெற்றிகரமாக ஆக்கி விட வேண்டும். எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நன்மையான காரியங்களை செய்பவரே உண்மையான முஃமின் ஆவார். முன்பை விட நல்ல காரியங்களைச் செய்யும் போது முன்னரை விட அதிகமான பணிவுடனும், இஸ்திக்ஃபாருடனும் அல்லாஹ்விடத்தில் மேலும் நன்மையான காரியங்களைச் செய்வதற்கான பாக்கியத்தை வேண்ட வேண்டும். ஓர் உண்மையான நம்பிக்கையாளர் அவ்வாறு வேண்டவும் செய்வார். ஏனென்றால் அப்போது தான் அந்தத் தொடர் நிலைபெற்று அவரது முடிவும் நல்லதாக அமையும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: சில சஹாபாக்கள் கூறுகின்றனர். நாங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை துஆ செய்தவாறு பார்க்கும் போது கடாரம் கொதிக்கும்போது அதிலிருந்து சப்தம் வருவதைப் போன்று அன்னாரிடமிருந்து சப்தம் வரும். எனவே, உங்களின் நஃப்ஸ்களின் சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்துங்கள். இறையச்சம் மற்றும் தூய்மையை ஏற்படுத்துங்கள். நாம் நன்மை செய்கிறோம் எனக் கருதாதீர்கள். ஏனென்றால் நன்மையிலும் நன்மையான காரியங்களிலும் கூட நேர்மையற்றத் தன்மை உருவாகக் கூடும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறி வந்தார்கள்: இன்றைய நாட்களில் மக்கள் ஹஜ் செய்து வந்த பின்னர் அவர்களிடம் முன்னரை விட அதிகமாக அகங்காரமும் தோன்றி விடுகின்றன. அவர்கள் ஹஜ்ஜின் பொருளை புரியாததனால் இந்தக் குறை அவர்களிடம் ஏற்படுகின்றது. ஆன்மீக ரீதியாக பலன் பெறுவதற்குப் பகரமாக வெறும் பெயரளவில் ஹாஜி ஆகி விடுவதால் தற்பெருமை கொள்கின்றனர். அத்துடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு நகைச்சுவை கதை ஒன்றையும் கூறினார்கள்.

குளிர்காலத்தில் இரவு நேரத்தில் ஒரு மூதாட்டி ஸ்டேஷனில் அமர்ந்திருந்தார். யாரோ ஒருவர் அவரிடமிருந்த போர்வையை எடுத்துச் சென்று விட்டார். அப்போது போர்வை திருடு போனதை மூதாட்டி உணர்ந்தாள். அதைக் கண்டு சப்தமாக, ஹாஜி சகோதரரே! என்னிடம் ஒரு போர்வை தான் இருந்தது. அது எனக்கு தேவைப்படுகிறது. திருப்பிக் கொடுத்து விடு என்று கூறினாள். திருடியவர் அருகிலேயே இருந்தார். போர்வை எடுத்துக் கொண்டு சென்று விடவில்லை. போர்வையை எடுத்தவர் அதைக் கேட்டு வெட்கம் அடைந்தவாறு போர்வையை அங்கு வைத்து விட்டார். மேலும் அவர் மூதாட்டியிடம் போர்வையைத் திருடியவர் ஹாஜி என்பது உமக்கு எப்படி தெரியும்? எனக் கேட்டார். அதற்கு அந்த மூதாட்டி, இக்காலத்தில் இந்த அளவுக்கு கடின உள்ளத்தை ஹாஜிகளால் மட்டுமே வெளிப்படுத்த முடியும் என்று கூறினாள்.

எனவே, நாங்கள் நன்மையான பணிகளில் ஈடுபட்டுள்ளோம் எனவும், நாங்கள் நல்லெண்ணம் கொண்டுள்ளோம் எனவும் கருதாதீர்கள். மனிதன் எவ்வளவு தான் நன்மை செய்தாலும் அதில் தீமை உருவாக முடியும். எவ்வளவு தான் நல்ல எண்ணம் மனிதன் கொண்டிருந்தாலும் அது அவனது ஈமானை சீர்கெடுக்க முடியும். ஏனென்றால் ஈமான் நமது செயல்களின் விளைவாக வருவதல்ல. மாறாக, அல்லாஹ்வின் கருணையின் விளைவால் வருவதாகும். இது மிக அடிப்படையான விஷயமாகும். இதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

நமது செயல்கள் எவ்வளவு இருந்தாலும் சரி அல்லாஹ்வின் கருணையும் அருளும் இல்லையென்றால் பின்னர் ஈமான் முழுமையாக முடியாது. எனவே நீங்கள் எப்போதும் அல்லாஹ்வின் கருணையின் மீது பார்வையை வையுங்கள். மேலும் உங்களது பார்வை எப்போதும் அவனது கைகளை நோக்கி செல்ல வேண்டும். ஏனென்றால் அல்லாஹ்வின் சன்னிதானத்திலிருந்து எழுந்த பிறகு எனக்காக வேறெங்கும் கதவுகள் திறக்கப்படாது என யாசிப்பவர் நினைத்தால் அத்தகைய நபர் அல்லாஹ்வின் அருளை ஈர்த்துக் கொள்வார். எனவே உங்களது பார்வை எப்போதும் அல்லாஹ்வை நோக்கியே எழ வேண்டும். எதுவரை உங்களது பார்வைகளை அல்லாஹ்வை நோக்கி வைப்பீர்களோ அதுவரை நீங்கள் பாதுகாப்பாக இருப்பீர்கள். ஏனென்றால் எவரது பார்வை இறைவனை நோக்கி இருக்குமோ அவருக்கு எவராலும் எந்த சேதத்தையும் ஏற்படுத்த முடியாது. அல்லாஹ் அல்லாதவற்றை நோக்கி பார்வை சென்றால், அல்லாஹ்வின் சன்னிதானத்திலிருந்து விலகி விட்டால், பின்னர் எவ்வளவு தான் நல்ல எண்ணங்கள் இருந்தாலும் சரி, நல்ல காரியங்கள் செய்தாலும் சரி அதற்கு எந்தப் பயனும் இருக்காது. மாறாக, அத்தகைய நபர் ஷய்த்தானின் மடியில் சென்று அமர்ந்து விடுவர். (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 17, பக்கம் 216-218) நிரந்தரமான தவ்பா இஸ்திக்ஃபார் மற்றும் அவனது கருணையை வேண்டுவது அவனது அருளை ஈர்க்க முயற்சி செய்தல் போன்ற இந்த விஷயங்கள் தான் மனிதனை நல்ல முடிவின் பக்கம் கொண்டு சேர்க்கும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு சம்பவம் ஒன்றை கூறி வந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் வீட்டிலோ அல்லது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களது வீட்டிலோ என்று எனக்கு சரியாக நினைவில்லை. நகைகள் திருடு போய் விட்டன. அவர்களது வேலைக்காரன் இருந்தான். அவன் கூப்பாடு போட்டு வந்தான். இறைவனின் கலீஃபாவிடம் திருடக்கூடிய துர்பாக்கியம் படைத்த மனிதனும் உள்ளானா? அவனுக்கு சற்றும் வெட்கமில்லையா? என்று கூறினான். மேலும் திருடியவன் மீது எண்ணற்ற சாபங்கள் இறங்கட்டுமாக! இறைவன் அவனது திரையை அகற்றுவானாக! அவனை இறைவன் இழிவிற்குள்ளாக்குவானாக! என்றெல்லாம் அவன் கூறினான். இறுதியில் விசாரணையின் போது ஒரு யூதனிடம் அந்த நகை அடகு வைக்கப்பட்டது தெரிய வந்தது. அந்த யூதனிடம், இந்த நகை உனக்கு எங்கிருந்து கிடைத்தது என கேட்கப்பட்டது. அப்போது அந்த யூதர் மிகவும் கூப்பாடு போட்ட அந்த வேலைக்காரனின் பெயரைக் கூறினார்.

எனவே, நாவினால் சாபமிடுவதும் அல்லது நாவினால் கட்டுப்படுவதாக வாதம் செய்வதும் ஒரு பெரிய காரியமல்ல. செயல்படுவது தான் பெரிய விஷயமாகும். வாயினால் கட்டுப்படுவதாக வாதம் செய்யக்கூடியவர் சில நேரத்தில் மிகப்பெரிய நயவஞ்சகனாகக் கூட இருக்கக் கூடும். (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 17, பக்கம் 516) எனவே, இது மிகவும் அச்சத்திற்குரிய இடமாகும். இவ்விஷயத்தின் பக்கம் நாம் எப்போதும் கவனம் செலுத்த வேண்டும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களிடம் ஒருமுறை அஹ்மதிய்யத்தின் எதிரி ஒருவர் நாங்கள் முடிவு எடுத்துள்ளோம். நாங்கள் அஹ்மதிய்யத்தை ஒழித்து விடுவோம் என மார்தட்டினார்.

அன்னார் கூறுகின்றார்கள்: என்னாலும் அவரைப் போன்று பதில் கூறியிருக்க முடியும். நீ ஒழித்துக் காட்டு என்று கூறியிருக்க முடியும். ஆனால் நான் அவரிடத்தில் கூறினேன். அழிப்பதும், அழிக்காமல் இருப்பதும் ஒன்றை நிலைநாட்டுவதும் இறைவனின் அதிகாரத்தில் உள்ளதாகும். அவன் எங்களை அழிக்க நாடினால், உங்களுக்கு எந்த முயற்சியும் செய்யத் தேவையில்லை. அவனே அழித்து விடுவான். ஆனால் அவன் எங்களை நிலைநாட்ட விரும்பினால் எவராலும் எதுவும் செய்ய முடியாது. 'தக்வா' தான் மனிதனை இதுபோன்ற வாதங்களிலிருந்து பாதுகாக்கின்றது. அதாவது நான் இவ்வாறு செய்து விடுவேன். அவ்வாறு செய்து விடுவேன் என்று வாதிப்பது ஒன்றுமல்ல. 'நான்' என்பதே வீணானதாகும். 'தக்வா' தான் சரியான பதிலை கற்றுத் தருகின்றது.

எனவே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அவருக்கு இவ்வாறு பதில் கூறினேன். எங்களால் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் அல்லாஹ் எங்களை நிலைநாட்ட விரும்பினால் உம்மால் எதுவும் செய்ய முடியாது. எவராலும் எங்களை அழிக்க முடியாது. நான் இதை செய்து விடுவேன். அதை செய்து விடுவேன் போன்ற வாதங்கள் செய்வதிலிருந்து தக்வா தான் பாதுகாக்கின்றது. அதுபோன்ற வாதங்களின் பயன் தான் என்ன?

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறி வந்தார்கள்: காதியானிலோ அல்லது வேறெங்கோ மிகக் கடுமையாக காலரா நோய் பரவியது. ஒரு ஜல்ஸாவின் சந்தர்ப்பத்தில் ஒரு நபர் கூறினார். இந்த மக்கள் தாமே செத்து மடிகின்றனர். காலரா பரவுகிறது. ஆனால் மக்கள் உண்பது மற்றும் குடிப்பதிலிருந்து விலகுவது கிடையாது. வயிறு புடைக்க உண்கின்றனர். அந்த மனிதர் கூறினார். பாருங்கள்! நானோ ஒரு சிறிய சப்பாத்தி தான் சாப்பிடுகிறேன். ஆனால் மக்கள் உண்பது மற்றும் குடிப்பத்திலிருந்து விலகுவது இல்லை. வயிறு புடைக்க உண்கின்றனர். அந்த மனிதர் கூறினார்: பாருங்கள்! நானோ ஒரு சிறிய சப்பாத்தி தான் சாப்பிடுகிறேன். ஆனால் இந்தக் கேடு கெட்ட மக்களைப் பாருங்கள். வயிறு நிறைய உண்கின்றனர். பின்னர் காலராவால் செத்து மடிகின்றனர். இரண்டாவது நாள் மற்றொரு ஜனாஸா வந்தது. இது யாருடையது? என ஒருவர் கேட்டார். ஏராளமான மக்கள் அந்த நபரின் பேச்சைக் கேட்டு வெறுப்படைந்திருந்தனர். ஒருவர், இது ஒரு சிறிய சப்பாத்தி சாப்பிடக் கூடியவரின் ஜனாஸாவாகும் எனக் கூறினார்.

எனவே, இதுபோன்ற வாதங்களால் என்ன பயன்? நாங்கள் இப்படி செய்து விடுவோம். அப்படி செய்து விடுவோம் என்பதெல்லாம் வீணானதாகும். ஆம்! அல்லாஹ் கூறியதை நாம் கூறலாம். அல்லாஹ் கூறியதை மறைத்தலும் கூடாது. அல்லாஹ் கூறியுள்ளான். كَتَبَ اللّٰهُ لَاَغْلِبَنَّ اَنَا وَرُسُلِیْ நானும் எனது தூதரும் வெற்றி பெறுவோம் என்பதை நாம் தீர்ப்பளித்து விட்டோம்.

ஒருவர் இப்போது நம்மிடம் நாங்கள் உங்களை தூள் தூளாக்கி விடுவோம் என்று கூறினால் நான் இவ்வாறு கூற முடியும். எனது ஆற்றல் பற்றிய கேள்வி என்றால் என்னால் ஒன்றும் கூற முடியாது. ஆனால், அந்த சொற்கள் அஹ்மதிய்யத்தைப் பற்றி கூறப்பட்டதென்றால் அது ஒருபோதும் நடக்காது. அஹ்மதிய்யத் நிச்சயமாக வெற்றி பெற்றே தீரும். (இன்ஷா அல்லாஹ்). (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 17, பக்கம் 343) இறைவனின் வாக்குறுதிகளில் நமக்கு எந்த அளவுக்கு நம்பிக்கை உள்ளது என்றால் அந்த அளவுக்கு நமது உயிர் மீது கூட நமக்கு நம்பிக்கை இல்லை. எனவே, அஹ்மதிய்யத் நிச்சயமாக வெற்றி பெற்றே தீரும். அது ஒருவேளை நமது வாழ்நாளில் நிகழலாம் அல்லது அதற்குப் பிறகு நிகழலாம். ஆனால், அந்த வெற்றியில் பங்குதாரர்களாக இடம்பெற நாம் தக்வாவில் நிலைநிற்பது மிகவும் அவசியமாகும். ஏனென்றால் அப்போது தான் நமது வாழ்நாளில் இல்லா விட்டாலும் கூட நமது சந்ததிகள் அதனை காண முடியும்.

துஆ எவ்வாறு செய்ய வேண்டும்? மேலும் அஹ்மதிகளுக்கு ஏற்பட்டிருக்கின்ற கடினமான சூழ்நிலைகளிலிருந்து எங்ஙனம் வெளி வர வேண்டும்? என்பதை விளக்கியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். உலகில் அன்பின் சிறந்த வெளிப்பாடு தாய் தனது மகன் மீது காட்டுகின்ற அன்பாகும் அல்லது தாய் தனது பிள்ளைகளிடம் காட்டுகின்ற அன்பாகும். சில நேரத்தில் தாயின் மார்பகங்களில் பால் வறண்டு விடும். ஆனால், குழந்தை அழுகின்ற போது பால் சுரந்து விடும். எனவே, எவ்வாறு குழந்தையின் அழுகையின்றி தாயின் மார்பில் பால் சுரக்க முடியாதோ அதே போன்று அல்லாஹ்வும் தனது கருணையை அடியாரின் அழுகை மற்றும் மன்றாடுதலோடு தொடர்புபடுத்தியுள்ளான். அடியார் மன்றாடும் போது ரஹ்மத் எனும் பால் சுரக்கின்றது. எனவே, நான் கூறியது போன்று உங்கள் புறமிருந்து முயற்சியின் உச்சத்தைத் தொட்டு விடுங்கள். ஆனால் நான் கூறுகின்ற முயற்சி என்பது நயவஞ்சகர்கள் பொருள் கொள்ளும் முயற்சி அல்ல. அதற்குப் பிறகு அதிக அதிகமாக எந்த அளவிற்கு துஆவைக் கொண்டு செல்ல முடியுமோ கொண்டு செல்ல வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நோன்பு வையுங்கள். 7 நோன்பு வையுங்கள். மேலும் துஆ செய்யுங்கள் என்று கூறியிருந்தார்கள். சில ஆண்டுகள் ஆகின்றன. நானும் ஜமாஅத்திலுள்ளவர்கள் நோன்பு வைக்க வேண்டும் எனக் கூறியிருந்தேன். (குத்பாத்தே மஸ்ரூர் தொகுதி 9 பக்கம் 501-502) இன்றும் சிலர் உள்ளனர். அவர்கள் நோன்பு நோற்கின்றனர். குறைந்தபட்சம் இப்போது 40 நோன்புகள் வைக்க வேண்டும். வாரம் ஒன்று வீதம் 40 வாரம் வரை நோன்பு வையுங்கள். குறிப்பாக துஆ செய்யுங்கள். நஃபில் தொழுது வாருங்கள். ஸதக்கா கொடுங்கள். ஏனெனில் ஜமாஅத்தின் நிலை என்னவென்றால் சில இடங்களில் மிக அதிக அளவில் கடுமை காட்டப்படுகின்றது. நாம் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் முறையிடும் போது எவ்வாறு குழந்தையின் அழுகையினால் தாயின் மார்பிலிருந்து பால் சுரக்கின்றதோ அதுபோன்று விண்ணிலிருந்து நமது ரப்பின் கருணை இறங்கும். இன்ஷா அல்லாஹ். மேலும் நமது வழிகளிலுள்ள தடைகளும், கஷ்டங்களும் அகன்று விடும். இன்ஷா அல்லாஹ். முன்னரும் இந்த தடைகளும், கஷ்டங்களும் இவ்வாறே அகன்றன. இப்போதும் அவ்வாறே விலகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: சில கஷ்டங்கள் எப்படிப்பட்டதென்றால், அதனை அகற்றுவது நமது சக்திக்குட்பட்டதல்ல. நம்மால் எதிரியின் வாயினை அடைக்க முடியாது. எதிரியின் எழுதுகோலை தடுத்து நிறுத்தவும் முடியாது. எதிரிகளின் நாவிலிருந்தும், எழுதுகோலிலிருந்து என்னவெல்லாம் வெளிப்படுகின்றது என்றால் அதனை வாசிப்பதற்கும், கேட்பதற்கும் நம்மால் இயலாது.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 99448-03650
+ 91 98885-67232
e-mail : editorbadrtamil@gmail.com
website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Vol. 1 Thursday 17 March 2016 Issue No. 2

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
Tel. : +91 1872-224757
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

இன்றைய நாட்களில் நாம் பார்க்கின்றோம். பாகிஸ்தானில் மிகவும் மோசமான சொற்களைப் பயன்படுத்தி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக விளம்பரம் செய்யப்படுகின்றது. முந்தைய காலத்திலும் அரசாங்கத்திற்கு கவனமூட்டப்பட்டது. அப்போது ஆங்கிலேய அரசாங்கம் இருந்தது. ஆனால், விஷயங்கள் கேட்கப்படுவதில்லை. விஷயங்களைக் கேட்டாலும் செவிடர்கள் கேட்பது போன்று கேட்பர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றி பேசப்பட்ட அதே விஷயங்கள் வேறு ஒரு தலைவரைப் பற்றி பேசப்பட்டிருந்தால் நாட்டில் நெருப்பு மூண்டிருக்கும். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றி தொடர்ச்சியாக தவறாகப் பேசப்படுகிறது. ஆனால் அவ்வாறு பேசுபவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எதுவரையென்றால் சில இடங்களிலிருந்து எனக்கு அறிக்கை கிடைத்துள்ளது. இது அந்தக் காலத்தில் நடந்ததாகும். அஹ்மதிகளுக்கு எதிராக என்ன விரும்புகின்றீர்களோ எழுதுங்கள். எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டோம் என எதிரிகளிடம் சில அதிகாரிகள் உறுதி அளித்ததாக நமக்கு தகவல் கிடைத்துள்ளது. (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 17. பக்கம் 152-153)

எனவே, இவ்வாறு எப்போதும் ஜமாஅத்துடன் நடந்து வந்தது. ஆனால் அல்லாஹ்வின் அருளால் ஒவ்வொரு தடைக்கு எதிரிலும் ஜமாஅத் முன்னேறி வந்துள்ளது. இது, எந்த சட்டத்தையும் ஜமாஅத்திற்கு எதிராக நிறைவேற்றாத அந்தக் காலத்து அரசாங்கத்தின் நிலையாகும். பாகிஸ்தானில் அஹ்மதிகளுக்கு எதிராக சட்டமும் உள்ளது. அது எதிரிகளுக்கு உதவியும் செய்கின்றது. அவர்கள் விரும்பியதை செய்கின்றனர். வாயில் என்ன வருகின்றதோ அதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக அநாகரிகமாகப் பேசுகின்றனர். அஹ்மதிகளை அநீதிகளுக்கு இலக்காக்குகின்றனர். நீதிமன்றங்களும் சின்னச் சின்ன விஷயத்தில் அஹ்மதிகளைத் தண்டிப்பதில் தற்போது துடிப்பாக உள்ளது. எனவே, அதற்காக நாம் இறை சன்னிதானத்தில் மிக அதிகமாக கதறுவது அவசியமாகும். பாகிஸ்தானிய அஹ்மதிகள் குறிப்பாக முன்பை விட அதிகமாக இதன் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். தூய்மையுடன் அல்லாஹ்வுக்கு முன் குனியுங்கள். நவாஃபில்கள் தொழுங்கள். ஸதக்காக்கள் கொடுங்கள். நோன்பு வையுங்கள். துஆக்கள் இன்றி அல்லாஹ்வின் கருணையை பொங்கி எழச் செய்வதைத் தவிர்த்து நமக்கு வேறு வழியில்லை. குறிப்பாக எங்கெல்லாம் அஹ்மதிகளுக்கு எதிராக அநீதிகள் அரங்கேறுகின்றனவோ அங்குள்ள அஹ்மதிகளுக்கு அர்ஷை அசைக்கும் துஆக்கள் செய்யும் பாக்கியத்தை அல்லாஹ் வழங்குவானாக! பொதுவாக முழு உலக அஹ்மதிகளும் ஜமாஅத்தின் முன்னேற்றம் மற்றும் அநீதிகளிலிருந்து தப்பிப்பதற்கு துஆவின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு அதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக! ஆமீன்.

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி)*

நபிமார்களின் வேதங்களில் மகன் என்று அழைக்கப்பட்டுள்ளனரோ அவ்வாறே நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சில முன்னறிவிப்புகளில் இறைவன் என்று அழைக்கப்பட்டுள்ளார்கள். அசல் விஷயம் என்னவென்றால், அந்த எல்லா நபிமார்களும் இறைவனின் மகன்களும் அல்ல. அவ்வாறே பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவனுமல்ல. மாறாக, இவை அனைத்துமே அன்பின் வடிவில் கூறப்பட்டுள்ள உருவகங்களேயாகும். அத்தகைய சொற்கள் இறைவனின் வார்த்தைகளில் அதிகமாக இருக்கின்றன. மனிதன் இறைவன் மீதுள்ள அன்பில் எந்த அளவு தன்னை மாய்த்துக் கொள்கின்றான் என்றால் அவனது இருப்பு எஞ்சியிருப்பதே இல்லை. அப்போது தன்னை அவன் முற்றிலும் மாய்த்துக் கொண்ட நிலையில் அத்தகைய சொற்கள் அவனைப் பற்றி கூறப்படுகின்றது. ஏனென்றால், இத்தகைய நிலைமையில் அவர்களது இருப்பு இடையில் இருப்பதில்லை. உதாரணமாக, அல்லாஹ் கூறுகின்றான்:

قُلْ يٰعِبَادِيَ الَّذِيْنَ اَسْرَفُوْا عَلٰٓى اَنْفُسِهِمْ لَا تَقْنَطُوْا مِنْ رَّحْمَةِ اللّٰهِ اِنَّ اللّٰهَ يَغْفِرُ الذُّنُوْبَ جَمِيْعًا

அதாவது, அந்த மக்களிடம் கூறுவீராக! எனது அடியார்களே! இறைவனது கருணையிலிருந்து அவநம்பிக்கை அடைய வேண்டாம். இறைவன் எல்லாப் பாவங்களையும் மன்னித்து விடுவான். இப்போது பாருங்கள். இந்த இடத்தில் யா இபாதல்லாஹி (இறைவனின் அடியார்களே) என்று கூறுவதற்குப் பகரமாக யா இபாதீ (என் அடியார்களே) என்று கூறப்பட்டிருக்கின்றது. ஆனால், மக்கள் இறைவனின் அடியார்கள் ஆவர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடியார்கள் அல்ல. ஆனால், இது உருவக வடிவில் கூறப்பட்டிருக்கின்றது.

அவ்வாறே, اِنَّ الَّذِيْنَ يُبَايِعُوْنَكَ اِنَّمَا يُبَايِعُوْنَ اللّٰهَ يَدُ اللّٰهِ فَوْقَ اَيْدِيْهِمْ அதாவது, எவர்கள் உம்மிடம் பைஅத் செய்கின்றனரோ அவர்கள் இறைவனிடம் பைஅத் செய்கின்றனர். இது இறைவனின் கையாகும். அது அவர்களின் கைகளின் மீது இருக்கின்றது என்று அல்லாஹ் கூறுகின்றான். இப்போது இந்த எல்லா வசனங்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கை இறைவனது கையாகக் கூறப்பட்டிருக்கின்றது. ஆனால், அது இறைவனின் கை அல்ல என்பது வெளிப்படையான விஷயமாகும்.

அவ்வாறே, ஓரிடத்தில் فَاذْكُرُوا اللّٰهَ كَذِكْرِكُمْ اٰبَآءَكُمْ اَوْ اَشَدَّ ذِكْرًا நீங்கள் இறைவனை உங்கள் தந்தையர்களை நினைவு கூர்வது போன்று நினைவு கூறுங்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

அவ்வாறே, அல்லாஹ் யூதர்களின் ஒரு கூற்றை யூதர்களுக்கு படிப்பினையாக திருக்குர்ஆனில் எடுத்துக் கூறியுள்ளான். அந்தக் கூற்று இதுவாகும்: نَحْنُ اَبْنٰٓؤُا اللّٰهِ وَاَحِبَّآؤُهٗ அதாவது, நாங்கள் இறைவனின் மகன்கள் ஆவோம். மேலும் அவனுக்குப் பிரியமானவர்களாவோம். இந்த இடத்தில் நீங்கள் குஃப்ரான விஷயங்களைக் கூறுகின்றீர்கள் என்று கூறி இந்த இடத்தில் அப்னா (மகன்கள்) என்ற சொற்களை இறைவன் எவ்வகையிலும் ரத்து செய்து விடவில்லை. மாறாக, நீங்கள் இறைவனின் நேசத்திற்கு உரியவர்களாக இருந்தால், பிறகு அவன் ஏன் உங்களுக்கு தண்டனையை தருகின்றான்? என்று இறைவன் கூறியுள்ளான். அப்னா (மகன்கள்) என்பதை மீண்டும் அவன் குறிப்பிடவேயில்லை. இதிலிருந்தும் யூதர்களின் நூல்களில் இறைவனின் நேசத்திற்குரியவர்கள் மகன் என்று கூட அழைக்கப்பட்டுள்ளனர் என்பது தெரிகின்றது. இப்போது இந்த அனைத்து விஷயங்களையும் நான் கூறியதன் நோக்கம் இதுவாகும். அதாவது, அல்லாஹ் தான் ஒருவருடன் அன்பு செலுத்துவதற்கு இந்த விஷயத்தை நிபந்தனையாக வைத்துள்ளான். அதாவது, அத்தகைய நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்ற வேண்டும். எனவே, எனக்கு இதில் சொந்த அனுபவம் இருக்கின்றது. அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையான உள்ளத்துடன் பின்பற்றுவதும், அவர்கள் மீது நேசம் கொள்வதும் இறுதியில் மனிதனை இறைவனுக்கு பிரியமானவனாக ஆக்கி விடுகின்றது. அது இவ்வாறு நிகழ்கின்றது. அதாவது, சுயமே அவரது உள்ளத்தில் இறை நேசத்தின் உருக்கத்தை இறைவன் உருவாக்கி விடுகின்றான். அப்போது அந்த நபர் ஒவ்வொரு பொருளை விட்டும் தனது உள்ளத்தை விலக்கி விட்டு இறைவன் பக்கம் குனிகின்றான். மேலும், அவனது அன்பும் ஆர்வமும் இறைவன் வரை மட்டுமே எஞ்சியிருக்கின்றது. அப்போது இறைவனின் அன்பின் ஒரு குறிப்பான தோற்றம் அவன் மீது படிகின்றது. அது அவனுக்கு பேரன்பு மற்றும் நேசத்தின் முழு வடிவத்தை வழங்கி ஆற்றல் மிக்க உணர்வுடன் அவனை தன் பக்கம் ஈர்க்கின்றது. அப்போது மனித உணர்வுகளை அவன் வெற்றி கொண்டு விடுகின்றான். மேலும், எல்லா வகையிலும் அவனுக்கு ஆதரவாகவும் உதவியாகவும் இறைவனின் அசாதாரணமான செயல்கள் அடையாளங்களின் வடிவில் வெளிப்படுகின்றன.

(ஹகீகதுல் வஹி ருஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 65 -67)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar, at Fazle-Umar Printing Press Qadian, Harchowal Road, Qadian
Distt: Gurdaspur-143516, Punjab, India. And published at office of the Weekly Badar Moh-Ahmadiyya, Harchowal Road P.o:Qadian Distt:Gsp-143516, Punjab.India.Editor: Muzzammil Ahmad